
செம்மணி

நிலம் 3 துகள் 127 வள்ளுவர் ஆண்டு 2052, 24 - 30 மார்கழி 2022 வாரமலர் பக்கங்கள் 25

# 6 மாதங்களாகியும் முப்படைகளும் தயார் நிலையில் இருக்க உத்தரவு

*அரச தலைவர் ரணில் விடுத்தார்*



பதவியேற்ற ஆறாவது மாதத்திலும் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கான தயார் நிலையில் முப்படைகளும் இருப்பதற்கான உத்தரவை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்திருக்கிறார். அரகலய போராட்டத்தால் அரச தலைவர் பதவியிலிருந்து பக்கம் 02

# நுரைச்சோலையில் மின்பிறப்பாக்கி ஒன்றின் இயக்கம் நிறுத்தப்பட்டது

நுரைச்சோலையில் உள்ள மின்பிறப்பாக்கிகளில் ஒன்றின் இயக்கம் வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்டது. எனினும் இந்த முடிவால் மின்வெட்டு நேரம் உயராது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த மின்பிறப்பாக்கியின் இயக்கத்தை நிறுத்துவதன் மூலம் இழக்கப்படும் 300 மெகாவோட் மின்சாரத்தை கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், நுரைச்சோலை மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பார்க்கிலும் கெரவலப்பிட்டிய நிலையத்தின் ஊடாக மின்சாரத்தைப் பெறுவதற்கு அதிக செலவு ஏற்படும் என்று மின்சார சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

எப்படி பக்கம் 03

# இந்திய அரசின் அனுசரணையோடு உலகின் மேற்பார்வையின் கீழ் பேச்சு

*மீண்டும் இப்படி வலியுறுத்துகிறார் செல்வம் எம்.பி.*



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்தோடு அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடங்கியுள்ள முயற்சிகள் இந்திய அரசின் அனுசரணையோடு உலகின் மேற்பார் வையின் கீழ் முன்னெடுக்கப்படவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

மன்னாரில் உள்ள தனது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். இதே கோரிக்கையை அவரது கட்சி பேச்சு பக்கம் 03

# பொம்மைகளுள் மறைத்து ஐஸ் மற்றும் குஷ் கடத்தல்

*சுங்கச் சோதனையில் சிக்கியது*

*ரூ. 16 கோடி பெறுமதியான பொருள்கள்*



பொம்மைகள் மற்றும் உணவுப் பொருட்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டு அனுப்பப்பட்ட ஐஸ் மற்றும் குஷ் (கஞ்சா போன்ற ஒரு வகை போதை இலைகள்) போதைப் பொருட்கள் சுங்க அதிகாரி பக்கம் 03

# யாழ்ப்பாணம்–பாண்டிச்சேரி படகுச் சேவை தாமதமாகும்

இந்தியாவின் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு படகு சேவை தொடங்குவதற்கு இன்னும் குறைந்தது 2 மாதங்களாவது ஆகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக இந்தச் சேவை தை மாதம் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காரைக்கால் துறைமுகத்தில் பயணிகள் சேவைக்கான சோதனை நிலையம் மற்றும் வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் நிறைவடைய இன்னும் பக்கம் 03

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# உணர்ந்து நடந்துகொள்ளுங்கள்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடக்கியிருக்கிறார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் அவர் ஒரு சந்திப்பை நடத்தி முடித்திருக்கிறார். அதில் ஜே.வி.பியினர் மற்றும் பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து நிற்கும் கட்சிகளைச் சேர்ந்தோர் கலந்துகொள்ளவில்லை. தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரும் கலந்துகொண்டனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ரணிலின் முயற்சியால் ஏதாவது ஒரு தீர்வைக் கண்டுவிடமுடியும் என்று நம்பத் தமிழ் மக்கள் தயாரில்லை என்றாலும் தற்போதைய சூழலில் இது ஒரு நல்ல அரசியல் நகர்வு என்பதை மறுப்பதற்கில்லை. தனிநாடு கேட்டுப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கமேகூட அரசுடனான பேச்சுக்களைத் தூக்கி எறிந்ததில்லை. அப்படியிருக்கும்போது பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகபட்சமான இணைப் பாட்சியை (சமஷ்டி) வலியுறுத்தும் தமிழ்க் கட்சிகள் பேச்சுக்களை நிராகரிப்பதற்கான முகாந்திரம் ஏதுமில்லை. வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்வதும் அதனைச் சிறப்பாகக் கையாண்டு வெற்றி பெறுவதும் அவசியம்.

இருப்பினும் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடந்த இரண்டாவது சந்திப்பிற்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனும் செல்லவில்லை. அந்தக் கூட்டம் குறித்த அழைப்புத் தமக்கு முறையாகக் கிடைக்கவில்லை, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மூலமே கிடைத்தது, திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் என்கிற காரணங்களை முன் வைத்து அவர்கள் இந்தச் சந்திப்பை உதாசீனப்படுத்தியுள்ளனர். பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும், பேச்சுக்களில் கலந்துரையாடப்படவேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும், பேச்சைத் தொடங்குவதற்கு முன்னதாக ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்படக்கூடிய விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்தகைய கூட்டத்தைத்தான் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் கூட்டணித் தலைவர் விக்னேஸ்வரனும் தவிர்துள்ளனர். அதற்காக அவர்கள் கூறும் சுமந்திரன் அழைப்பு விடுத்தார் என்பது உள்ளிட்ட காரணங்கள் சிறுபிள்ளைத்தனமாகத் தெரிகின்றன.

தனி நபர்கள் சார்ந்தல்ல இனப்பிரச்சினையும் அதற்கான தீர்வும். எத்தகைய சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொண்டு, தமது ஆளுமையால் அதனை வெற்றிகொள்ளக் கூடிய ஆற்றல் உள்ள தலைவர்கள் இத்தகைய சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டு இருக்கமாட்டார்கள். தமது மக்களுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்தையும் நழுவ விடமாட்டார்கள். ஆளுமைக் குறைபாடுள்ளவர்களே மற்றவர்கள் மீது குற்றங்களைக் கண்டுபிடித்துக் காரணங்களை அடுக்கிக்கொண்டிருப்பார்கள்.

ரணிலின் இரண்டாவது கூட்டத்தை தவிர்த்தவர்களின் கருத்துக்களும் அப்படித்தான் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலாவது இவர்கள் தமது சிறுபிள்ளைத் தனங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களுக்காகத் தன்னல மற்றுச் செயற்படமுன்வரவேண்டும். இல்லையேல் மக்கள் இவர்களை உதாசீனம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.



# அரசியல் கைதிகளான 16 பேரினது வழக்குகளை துரிதப்படுத்த பரிந்துரை

*நீதி அமைச்சர் வழங்கினார்*

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டு காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் மற்றும் போராளிகளைச் சட்டப்படியும் மனிதாபிமான அடிப்படையிலும் விடுதலை செய்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார். சிறைச்சாலைகளில் உள்ள 8 விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.இவர்களின் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச் சாட்டின் கீழ் சிறையில் பல ஆண்டுகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 பேரின் வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்து,அவற்றை நிறைவு செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளேன். தலதா மாளிகை, மத்திய வங்கி மீது குண்டுத்தாக்குதல், முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலராகப் பதவி வகித்தபோது அவரையும் முன்னாள் தரைப் படைத் தளபதி சரத் பொன்சேகாவையும் இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்களும் சிறைச்சாலைகளில் உள்ளார்கள். இவர்களை விடுதலை செய்வதாயின் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து ஆலோசனைகள் கோரப்படவேண்டும். அது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள வயது முதிர்ந்தோர், நோய் வாய்ப்பட்டோர் ஆகியோரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரின் தகவல்களும் தற்போது கோரப்பட்டுள்ளன.

சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்கு அமைய வயது முதிர்ந்தோர் மற்றும் கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் சுதந்திர தினத்தன்று விடுதலை செய்யப்படுவார்கள் என்றார்.

## 6 மாதங்களாகியும்...

கோட்டாபய ராஜபக்ச அகற்றப்பட்டதன் பின்னர் அதிகாரத்திற்கு வந்த ரணில் விக்கிரமசிங்க நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேண முப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருப்பதற்கான அழைப்பை அரசிதழ் மூலம் விடுத்திருந்தார். மாதா மாதம் அது நீடிக்கப்பட்டு வருகின்றது. ரணில் ஆட்சிப் பொறுப்பையேற்று 5 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் மார்கழி 22ஆம் நாள் மீண்டும் அந்த உத்தரவு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்காக தரைப் படை, கடற்படை, வான் படை ஆகியன தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலதிகமாகத் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தரைப் படையினரைத் தயார் நிலையில் இருக்குமாறும் அந்த உத்தரவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம்...

இரு மாதங்கள் பிடிக்கும் என்பதால் அதன் பின்னரே சேவையைத் தொடங்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இலங்கை, இந்தியா இடையிலான வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் யாழ்ப்பாணம், பாண்டிச்சேரி இடையிலான பயணிகள் படகுச் சேவையைத் தொடங்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்கு இந்திய நடுவண் அரசும் சம்மதம் தெரிவித்துள்ளது.
இதையடுத்து இந்தப் பயணிகள் படகுச் சேவையை நடத்த இந்தியாவைச் சேர்ந்த 5 நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. நடுவண் அரசே அவற்றிலிருந்து எந்த நிறுவனங்கள் சேவையை நடத்த முடியும் என்கிற முடிவை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சேவையில் பயணி ஒருவருக்கு இந்திய மதிப்பில் 5 ஆயிரம் ரூபாய் கட்டணமாக அறவிடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒருவர் 100 கிலோ பொருட்களையும் இதன் மூலம் எடுத்துச் செல்ல முடியும். ஒரு தடவையில் 400 வரையான பயணிகள் செல்ல முடியும்.
"படகுச் சேவையை ஜனவரியில் தொடங்குவது கடினம். தற்போதைய பணிகள் நிறைவடைய இரு மாதங்களாகும். அதன்பிறகு படகுப் போக்குவரத்துக்கான நாள் இறுதி செய்யப்படும். வர்த்தகம் மட்டுமில்லாமல் சுற்றுலாவுக்கும் உகந்ததாக இச்சேவை இருக்கும். குறிப்பாக காரைக்கால் திருநள்ளாறு கோயில் உள்ளிட்ட ஆன்மீக சுற்றுலாவும் நன்கு வளர்ச்சி அடையும்" என்று காரைக்கால் துறைமுக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

---

## இந்திய...

தொடங்க முன்னரும் வலியுறுத்தியிருந்தது. ஆனால் அரச தலைவருடன் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட செல்வம் இது பற்றி எந்தக் கருத்தையும் வலியுறுத்தவில்லை என்கிற குற்றச்சாட்டு எழுந்திருந்தது.
அரச தலைவர் பேச்சைத் தொடக்கியிருப்பதன் நோக்கம் என்னவென்று தெரியாத நிலையில் தமது கோரிக்கையை அந்தக் கூட்டத்தில் தான் வலியுறுத்தவில்லை என்றும் செல்வம் தெரிவித்தார். "அரச தலைவர் நல்ல நோக்கத்தோடு பேச்சுக்கு வந்திருக்கிறாரா அல்லது பொருளாதார மேம்பாட்டுக்காக இந்த விடயத்தைக் கையிலெடுத்திருக்கிறாரா என்றொரு கேள்வி இருக்கின்றது. அரச தலைவரது நிகழ்ச்சித் திட்டம் தெரியாத நிலையில் முதல் கூட்டத்தில் எமது கோரிக்கையை வலியுறுத்தவில்லை" என்றார் அவர்.
"வாய்ப்பை நழுவவிட்டுவிடக்கூடாது. தமிழர் தரப்பில் எல்லோரும் கூடி ஒன்றாக முடிவுகளை எடுக்கும்பட்சத்தில் எமது நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.
காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்கிற உண்மையை அரசு கூறவேண்டும், அதுவே இன்றைய தேவை, அவர்களின் உறவினர்களுக்கு 2 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படுவதற்கு முன்னர் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

---

## பொம்மைகளுள்...

களால் கைப்பற்றப்பட்டுள்ளன. தபால் மூலம் அனுப்பப்பட்ட பொதிகளினுள் தந்திரமாக மறைக்கப்பட்டிருந்த இந்த போதைப் பொருள்களின் பெறுமதி 16.59 கோடி ரூபாய் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தத் தபால் பொதிகள் ஸ்பெயின், ஐக்கிய இராச்சியம் (லண்டன்), ஜேர்மனி, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன.
"பொம்மைகள், உணவு ரின்கள் அடங்கிய 7 பொதிகளில் தந்திரமாக மறைக்கப்பட்டிருந்த இந்த போதைப் பொருட்களைக் கைப்பற்றியிருக்கினறோம். இதில் 4.64 கிலோ குஷ் மற்றும் 4 கிலோ நிறையுடைய ஐஸ் போதை மாத்திரைகள் 9 ஆயிரத்து 586 என்பன அடங்கியிருந்தன" என்று சுங்க அதிகாரிகள் கூறினர்.
கைப்பற்றப்பட்ட ஐஸ் போதை மாத்திரைகளின் பெறுமதி 7.01 கோடி ரூபாய். குஷ் போதைப் பொருளின் பெறுமதி 9.59 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.
இந்த ஆண்டில் ஐப்பசி மாதம் வரையில் 377 கிலோ நிறையுடைய ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனோடு தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் 6 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஒட்டுமொத்தமாகப் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் மட்டும் 67 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆபத்தான மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டுக்கான தேசிய சபை தெரிவித்தது.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 35 ஆயிரத்து 765 பேர் ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காகவும் 25 அயிரத்து 114 பேர் கஞ்சா தொடர்பான குற்றங்களுக்காகவும் 6 ஆயிரத்து 728 பேர் ஐஸ் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தப் 10 மாதங்களில் ஆயிரத்து 46 கிலோ ஹெரோயின், 377 கிலோ ஐஸ், 10 ஆயிரத்து 215 கிலோ கஞ்சா ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

---

## நுரைச்சோலையில்...

யிருப்பினும் இந்த மாற்றங்கள் மூலம் மின்வெட்டு அதிகரிக்கமாட்டாது என்றும் அது தொடர்ந்தும் 2 மணி 20 நிமிடங்களாகவே இருக்கும் என்றும் மின்சார சபையினர் தெரிவித்தனர்.

# இருளை நோக்கிய பாதை!

சந்திரன்

போதைப்பொருள்கள் எங்கோ ஓரிடத்தில் தயாரிக்கப்படுபவையாக இருந்தாலும் அதைப் பயன்படுத்துவோர் மிகச் சிறிய நாடான இலங்கையில் ஒவ்வவொரு மூலைகளிலும் அதற்காகக் காத்திருப்பது தெரிகிறது. போதைப் பொருள்களை உற்பத்தி செய்து ஆய்வுகூடங்களில் பதப்படுத்திப் பக்குவமாகப் பொதி செய்து உலகம் முழுதும் கடத்துகின்றனர். இது



சாதாரண தனி நபரால் மேற்கொள்ளக்கூடியதல்ல. இது உலகு தழுவிய கூட்டு முயற்சி. போதை வியாபாரிகளின் முக்கிய நோக்கம் இலகுவில் பணம் சம்பாதிப்பதே. இதில் பல தரப்பினர் சம்பந்தப்படுகின்றனர். அரசியல்வாதிகள், பாதுகாப்புத் தரப்பினர், உயரதிகாரிகள் என மிகப் பெரிய வலைப்பின்னல் ஒன்று செயற்பட்டு வருகிறது.

**"போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மனநிலை பாதிப்புக்கும் தாழ்வுச் சிக்கலுக்கும் உட்பட்டவர்களாக இருக்கிறார்கள்"**

**ஈடுபடுவோர்...?**

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மனநிலை பாதிப்புக்கும் தாழ்வுச் சிக்கலுக்கும் உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர் ஒற்றுமையில்லாத குடும்பத்துப் பிள்ளைகள், பெற்றோர் பிரிந்து வேறு திருமணம் செய்ததால் பாட்டன் - பாட்டி அல்லது வேறு யாராலோ வளர்க்கப்படுகின்ற குழந்தைகளே வளரும் பருவத்தில் மற்றவர்களுடன் தம்மை ஒப்பிட்டுத் தமக்குக் கல்வி இல்லை, அதனால் உத்தியோகம் பெற முடியாத சூழல், இருப்பதற்கு நல்ல வீடில்லை. உணவு, உடை இல்லை. மற்றவர்களைப் போல வாழ முடியவில்லை, சமூகத்தில் மதிப்பில்லை என்ற ஏக்கத்துடன் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

**சிறைச்சாலைகளின் பங்கு**

போதை கடத்துவோர், விற்போர், பாவிப்பவர்கள் எனப் பார்த்தால் சிறு வயதில் சிறு குற்றம் ஒன்றிற்காகத் தண்டனை பெற்றுச் சிறை வாசம் அனுபவித்தவர்களாகக் காணப்படுவர். அதன் பின் சமூக விரோதச் செயல்கள், குற்றச் செயல்கள் என எதற்கும் துணிந்த நபர்களாகச் சிறையிலிருக்கின்ற மூத்த கைதிகளால் வழி நடத்தப்படுகின்றனர். வீட்டில் ஆதரவற்ற நிலையிலிருந்த பிள்ளைகள், பாடசாலையிலிருந்து விலகிச் சிறைக்குள் சென்றதும் தமக்கு யாரும் உதவுவதற்கோ ஆதரவளிக்கவோ இல்லை என உணரும் கட்டத்தில் மூத்த கைதிகள் அவர்களை அரவணைத்து "நாங்கள் இருக்கிறம் நீ ஒன்றுக்கும் பயப்பிடாதை" என்று நம்பிக்கை ஊட்டுகிறார்கள். குறிப்பிட்ட சிறுவன் சிறையை விட்டு

## போதைக் கடத்தலில் இலகுவாகப் பணம் உழைத்து விரைவாக முன்னேறிவிடலாம் என்று நம்புவதால் உயிரைப் பணயம் வைத்து கடத்தலில் ஈடுபடுகின்றனர்

வெளியேறும் முன்னரே புகைத்தல், போதைப் பாவனை, ஓரினச் சேர்க்கை ஆகிய விடயங்களில் தேர்ச்சி பெற்று விடுகிறான். தாம் வாழ்வதற்கு வேறோர் உலகம் உண்டென்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு மனநிலை மாற்றம் பெற்று குற்றக் கைதிக்குரிய மனப் பக்குபவத்தைப் பெற்றபின் மத குருக்கள், மூத்தோர், ஆசிரியர்கள், கிராமத் தலைவர்கள் என யாருடைய புத்திமதிகளையும் கேட்பதற்கு அவன் தயாராக இருப்பதில்லை. அவ்வாறானவர்கள் சமூக ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதில்லை. கடந்து வந்த பாதைக்கும் தொடரவிருக்கும் பாதைக்கும் இந்தப் புத்திமதிகள் பயன்படாது என்று நம்புகின்றனர். இந்தச் சமூகம் தம்மை தொடக்கத்தில் கவனிக்கவில்லை என்ற குற்றவுணர்வும் இவர்களுக்குண்டு.



#### இலகுவாகப் பணம் உழைத்தல்

போதைக் கடத்தலில் இலகுவாகப் பணம் உழைத்து விரைவாக முன்னேறிவிடலாம் என்று நம்புவதால் உயிரைப் பணயம் வைத்து கடத்தலில் ஈடுபடுகின்றனர். இவற்றிற்குத் திரைப்படங்களும் களம் அமைத்துக் கொடுக்கின்றன. சண்டித்தனமும் பணமும் கைக்கு வந்ததும் வசதி வாய்ப்புகளைப் பெறுகின்றனர். தமது தொழிலுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அவசியமாக இருப்பதால் அரசியல்வாதிகளின் கையாட்களாகத் தேர்தல் காலத்தில் பணத்தை அள்ளிவீசிச் செலவிடுபவர்களாகவும் அரசியல்வாதிக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தாமே களத்தில் இறங்கிச் செயற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். இதனால் இவர்களைக் காப்பாற்ற வேண்டிய தேவை அரசியல்வாதிகளுக்கு ஏற்படுகிறது. இத்தகைய நபர்கள் எதையும் செய்யத் தயாராக இருப்பதால் கட்சித் தொண்டர்களைவிட இவர்களையே அரசியல்வாதிகள் நம்புகின்றனர்.

#### வலைப்பின்னல்

போதைப் பொருள் கடத்தலில் முன்னாள் படைச்சிப்பாய்கள், ஆயுHதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இருப்பதும் தெரியவந்துள்ளது. இந்த வியாபாரம் இன மத மொழி பிரதேச கடந்து வளரும் நவீன வியாபார முயற்சியாக இருக்கிறது. மிக வேகமாகப் பணம் உழைத்து முன்னேறும் ஆசையுடன் இவர்கள் வாழ்கின்றனர்.

குறுகிய காலத்தில் பெருந்தொகைப் பணம் கையில் புரள்வதால் அதை வைத்துப் பலரையும் விலைக்கு வாங்கி விடுகின்றனர். மிரட்டல், ஆட்கடத்தல், கையூட்டு, ஊழல், பாலியல் முறைகேடுகள், கொலை எனப் பல குற்றச் செயல்கள் சமூகத்தில் அதிகரிப்பதற்கு இவர்களின் கைகளில் உபரியாகக் கிடைக்கும் பணமே காரணமாக அமைகிறது. இந்த ஓட்டத்தில் அரச அதிகாரிகள், காவல் துறையினர், சட்டத்தரணிகள், அடாவடிக்காரர்கள் எனப் பலரையும் கையாளும் வல்லமை இந்தப் போதை வியாபாரிகளுக்கு இருக்கிறது.

இலங்கை என்கிற சிறுதீவின் எல்லாப் பாகங்களிலும் போதைப் பொருள்கள் பெருமளவு பரவிவிட்டன. இவ்வாறான மிகப் பெரிய வலைப்பின்னல் பல வருடங்களாகத் திட்டமிட்டு நடப்பதால் இலகுவாக அதைக் கட்டுப்படுத்த முடியாது. பாடசாலை மாணவர்களின் கைகளுக்குப் போதைப் பொருள்கள் போகக்கூடாது என்ற நோக்கத்தில் பாதுகாப்புத் தரப்பினரையும் அதிகாரிகளையும் திசை திருப்பிவிட்டு ஏனைய இடங்களுக்கு மிக இலகுவாக அவற்றைக் கடத்திச் செல்லக்கூடிய வழி திறக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் எதிர்காலத்தை இருளுக்குள் தள்ளும் செயற்பாடுகளே.

# ஈழத் தமிழருக்கு உக்ரெய்ன் சமர் கற்றுத்தரும் பாடங்கள்...

மருத்துவர்
சி. யமுனாநந்தா



கடந்த 75 வருட காலத்தில் பல தசாப்தங்களாக அழிவுற்ற ஈழத் தமிழினம் இனிமேல் அழியாது இருப்பதற்கு தற்போதைய உக்ரெய்ன் போர் சில பாடங்களைக் கற்றுத் தருகின்றது. நாம் உக்ரெய்ன் போர் தொடர்பான இராஜதந்திர மூலோபாயங்களை நுணுக்கமாக ஆராய்தல் அவசியம்.

உக்ரெய்ன் இராஜதந்திர மதிப்பு உள்ள நாடு. உக்ரெயின் நாடு உலக வல்லரசான ரஷ்யாவை இராஜதந்திர ரீதியில் கையாளத் தவறிவிட்டது. மாறாக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றுடன் இணைந்து தனது அயல் நாடான ரஷ்யாவை எதிர்த்தது. இதன் பாதிப்பு நேரடியாக உக்ரெய்னில் பெரும் மனித அழிவுகளை ஏற்படுத்தி உக்ரெய்ன் வளர்ச்சியை 50 வருடங்களுக்குப் பின்னோக்கித் தள்ளிவிட்டது. மேலும் உலகின் சனத்தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களின் வறுமைக்கும், பட்டினிச் சாவிற்கும், நோய்ப் பரம்பலுக்கும் மறைமுகமாக ஏதுவாக அமைந்துவிட்டது உக்ரெய்ன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு.

விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை, பொருளாதார மேன்நிலை என்பன குறித்த தாராள சிந்தனை ஒரு நாட்டிற்கும், சமூகத்திற்கும் தேவை. இதனை உக்ரெய்ன் அரசு செய்யத் தவறியமையை நன்கு உணரலாம். மேலும் ஊழல், கபடம், சர்வாதிகாரம் நிறைந்த அரசியல் செயற்பாடுகள் தவறானவையாகும். இவை ஈழத் தமிழர்களும் மீளவும் கற்றுக்கொள்ள வேண்டியவை.

எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியினை ஒருபோதும் பெறமுடியாது. இதனை உலக நாடுகள் இன்று உக்ரெய்னில் பிரதிபலிக்கின்றன. அஃது அவ்வாறெனின் நாம் இதுவரை இலங்கையில் மேற்கொண்ட மனித உரிமைகளுக்கான போராட்டம் வீண் போனதா என்ற கேள்வி நியாயமாகவே எமக்கு ஆழ் மனங்களில் எழும்.

நாகரீகமான உலகில் மனித நேயத்திற்காகப் போராடுவது ஒவ்வொருவரதும் கடமையாகும். அப்பணி ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமானது. கட்டமைக்கப்பட்ட கூட்டு மறுதலிப்பு இன ரீதியாகவும், மத ரீதியாகவும், பெரும்பான்மை அரசு சார்பாகவும், உலக இராஜதந்திரிகளின் கூட்டுக்களாலும் ஏற்பட்டன. அவை தொடரவே செய்யும். அதனால் நாம் சோர்வுறக்கூடாது.

ஈழத் தமிழர் வாழ்வியலில் இது ஓர் துன்பியல் நிகழ்வாகத் தொடர்ந்தும் பிரவாகம் செய்வதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது சமூகம் போரால் அழிக்கப்பட்டது. கடல்கோள்களால் அழிக்கப்பட்டது. தீநுண்மி தொற்றும் பேரிடரால் அழிக்கப்பட்டது. தற்போது பொருளாதார மந்தநிலையால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு எஞ்சியுள்ள மக்களும் தமது சொத்துக்களை விற்று வாழவேண்டிய நிர்ப்பந்தங்களும், தமது சொத்துக்களை மலிவான விலையில் விற்று வெளிநாடு செல்லும் சூழலும் அதிகரித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சாதாரண பணக்காரர் பன்மடங்கு பணக்காரராக மாறுகின்றனர். இவ்வாறான நிலைமை 1971 இந்தியா பாகிஸ்தான் போரின்போது வங்க தேசம் உருவான பின், வங்கசேத்திலும், பாகிஸ்தானிலும் ஏற்பட்டது.

புலம்பெயர் செல்வந்தர்களும் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் காணிகள், கட்டடங்களில் முதலீடு செய்கின்றனர். இதற்கு அரச அதிகாரிகள், படைத்துறை அதிகாரிகள் ஆதரவும், அவர்களுக்கான கையூட்டல்களும் நிறையவே நிகழ்கின்றன.

சமூகவியலில் நோக்கும்போது இன்று தமிழ் சமூகத்தில் பில்லியன் ரூபாய்களுடன் நூற்றுக்கணக்கான

மேல்வர்க்க சமூகம் உருவாகியுள்ளது. அதே வேளை ஒரு வேளைக்கு சில மில்லி மீட்டர் பால் குடிக்க வழியில்லாத ஏழைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி ஒரு புறம் பணத்தைப் பன்மடங்காக்கும் கூட்டமும், மறுபுறம் அன்றாட உணவுக்கு கையேந்தும் மக்கள் திரட்சியும் உள்ளது. மக்கள் பட்டினியில் உள்ளபோது தனவந்தர்கள் அளிக்கும் சிறு உணவுப்பொதிகூட அவர்களை கடவுளாகவும், தர்ம வள்ளலாகவும் கருத வைக்கும் நிலை சகஜமாகி உள்ளது. இது ஓர் போலிச்சமூக வேடமாகும். வங்கிகளும் போலி முதலீட்டு உத்தரவாதத்தினை வழங்கி வருகின்றன. நுண்ணிதிய விருத்திக்கான வழிகாட்டல்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

முறையான பொருளியல் சிந்தனை இல்லாத அரசியல் முன்னெடுப்புக்கள் ஒரு நாட்டை எவ்வாறு அழிக்கும் என்பதனை உக்ரெய்ன் நாடும் அதன் மக்களும் அனுபவிக்கும் துன்பங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும். தற்போது இலங்கையில் உள்ள அரசு மக்களால் நிராகரிகப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளை கொண்டமைந்துள்ளது. இது ஓர் போலி அரசு ஆகும். இதன் மக்களாட்சித்தன்மை கேள்விக் குறியாகவே உள்ளது. இத்தகைய சூழலில் ஓர் சோசலிசப் புரட்சி அதாவது சமத்துவப் புரட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

தற்போதைய பொருளாதார மந்த நிலையில் மக்களின் அவலங்களை மறைப்பதற்காக மீண்டும் இனவாதத்தைக் கையிலெடுக்க சிங்கள அரசியல் கட்சிகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் தொடங்கியுள்ளன. இனவாத உணர்வில் பசி உணர்வை மழுங்கடிக்கலாம் என்பது அரசியல் வாதிகளின் எண்ணம். அதன் மூலம் தாம் தொடர்ந்தும்' சௌகரிய வாழ்வை வாழலாம். வெளிநாட்டு உதவிகளையும் கையாளலாம் என்பது அவர்களது குறிக்கோள். அவர்களது இருப்பைப் பாதுகாக்க படைகளைப் பயன்படுத்தவே புலிகளின் மீள் உருவாக்கம் என்ற நாடகம். இதன் மூலம் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழரைத் தொடர்ந்தும் அடக்கலாம். அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் என்பதும் வெறும் நாடகமே. இது சிங்களவர்களது வயிற்றுப்பசியை மறைக்க வல்லது.

எனவே தமிழர்கள் அரசியல் தளத்திற்கு அப்பால் பொருளாதாரத் தளத்தினைக் காத்திரமாக உருவாக்கல் வேண்டும். வங்காள தேசத்தில் நடந்த சமூக மாற்றங்களும், மாலி தேசத்தில் நடந்த சமூக மாற்றங்களும், உக்ரெய்ன் மக்களின் அவலநிலையும் எமக்கு ஓர் சுய அரசியல் பிரக்ஞையினை உருவாக்கி உள்ளது.

எமது சுய அரசியல் பிரக்ஞையில் பொருளாதாரத் தளம் பலை எதிர்கொள்ள ஆக்கபூர்வமான சமூகச் செயற்திட்டங்கள் அவசியம். அங்கீகாரம் அற்ற சட்டவலுவற்ற அரசுடன் அரசியல் பேச்சுவார்த்தைகள் என்பது வெறும் வார்த்தைகளாகவே அமையும். பொருளாதாரச் சமத்துவத்திற்கான தொழில் வாய்ப்புக்களை அவசரமாக உருவாக்க வேண்டியது எமது கடமையாகும்.

> “ **தற்போது இலங்கையில் உள்ள அரசு மக்களால் நிராகரிகப்பட்ட நாடாளுமன்றப் பிரதி நிதிகளை கொண்டமைந்துள்ளது** ”



சிறைக்குள்...

88

# சிறைச்சாலை இறைச்சிக்கடை...!



தர்மராசா

இனப்படுகொலை போன்றதொரு பெரிய குற்றமாகவே சித்திரவதையும் பன்னாட்டுக் குற்றமாகக் கருதப்படுகிறது. சித்திரவதை என்பது உலகெங்கிலும் உள்ளது. அதன் உண்மையான பரிமாணம் சித்திரவதைக்கு உள்ளாகுபவர்களுக்குத்தான் தெரியும். கைதியாக இருப்பவரைக் கேவலமாக நடத்துவது என்பது எந்தவோர் அரசினதும் இயல்பாக இருக்கிறது. தமிழ்த் தேசிய இனப் போராட்டம் தொடங்கியபோது அதை அடக்குவதற்காக அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு இடையில் சிக்கிய எல்லாத் தமிழர்களும் சித்திரவதைகளுக்கு உட்பட்டனர். இந்தச் சித்திரவதைகள் உடல், உள ரீதியாகத் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன.

கைதிகளைச் சித்திரவதை செய்வதற்குப் பல நோக்கங்கள் இருக்கின்றன. உடனடியாக அவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுவிடவேண்டும் என்பதிலேயே அதிக சித்திரவதைகள் அரங்கேறுகின்றன. இதன் மூலம் நபர் ஒருவரைக் கைது செய்த உடனேயே பல தகவல்களை விசாரணையாளர்கள் அவரிடமிருந்து பெற்றுவிடுகின்றனர். குற்றத்துடன் தொடர்புபட்டும் இன்னமும் கைது செய்யப்படாத நபர்கள் குறித்த தகவல்களைக் கைது செய்யப்பட்டவரிடம் பெற்று மற்றவர்களையும் கைதுசெய்ய முயற்சிக்கின்றனர். இதன் விளைவாகச் சித்திரவதைகள் அரங்கேறுகின்றன. கைது செய்யப்பட்ட நபரை அவரது குடும்பத்தினரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தனிமைப்படுத்திவிடுகின்றனர். அவரது கைது தொடர்பில் வெளியில் தெரிவதற்கு முன்பு அவருடன் தொடர்புபட்ட வேறு நபர்களையும் அவர்களது திட்டங்கள் பற்றியும் அறிவதற்காக அவசரமாகக் கடுமையான சித்திரவதைகளை மேற்கொள்கின்றனர்.

சித்திரவதை செய்வதற்குச் சொல்லப்படுகின்ற இன்னோர் காரணம் ஏற்படவிருக்கும் பெரியளவான அழிவைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதாகும். சித்திரவதை செய்வதற்கான இன்னோர் காரணம் குற்றத்தைப் பலவந்தப்படுத்தி ஒப்புக்கொள்ளச் செய்வதற்காகும். குடிமகன் ஒருவர் துன்புறுத்தலுக்கு உள்ளாகக்கூடாது என்பதில் மனித உரிமையாளர்கள் அக்கறை செலுத்துகிறபோதிலும் காவல்துறையினரைப் பொறுத்தவரை சந்தேகநபரிடம்




# "ஆனையிறவு முகாமைத் தக்க வைத்தேன்"

சனத் கருணாரத்ன என்பவர் காலி இந்துநுவ பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1970ஆம் ஆண்டு அரச படையில் சேர்ந்த அவர் 1976-77காலப்பகுதியில் முதலாவது சிங்கப் படையணிக்குப் பொறுப்பான அதிகாரியாகத் தரம் உயர்த்தப்பட்டார். 1986இல் ஆறாவது படையணியை உருவாக்கினார். தனது தொடக்கப் பயிற்சியை அம்பாறை - கொண்டை வெட்டுவான் படைமுகாமில் பெற்றுப் பின்னர் பல்வேறு பதவிகளை வகித்தார். இலங்கைப் படைப் பேச்சாளராகவும் பதவி வகித்தார்.

தனது சேவைக்காலத்தில் 1991இல் ஆனையிறவு படைமுகாமைப் புலிகள் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட பிரயத்தனத்தை (புலிகள் இந்தத் தாக்குதலுக்கு ஆகாயக் கடல்வழிச் சமர் என்று பெயரிட்டிருந்தனர்) தடுத்து நிறுத்தியவர் என்பதற்காகப் படையினரால் பாராட்டப்படுகிறார். இதற்காக இவருக்கு பரண வீர விபூஷண விருது வழங்கப்பட்டுள்ளது. தனது பதவிக் காலத்தில் நடந்த ஆனையிறவுப் படைத்தளத் தாக்குதல் தொடர்பில் வெனச யூரியூப் தளத்தில் தனது அனுபவங்களை அவர் இவ்வாறு பகிர்ந்தார்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

நான் 1970 காலப்பகுதியில் இலங்கைப் படையில் சேர்ந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு பதவிகளை வகித்தேன். 1990இல் பலாலிப் படை முகாமில் இரண்டாவது கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றினேன். அப்போது புலிகள் தமது முதலாவது ஈழப்போரை தொடங்கியிருந்தார்கள்..

தகவல்களைப் பெறுவதற்குச் சித்திரவதையே கைகொடுப்பதாக இருக்கிறது. இதனால் விசாரணையாளர்கள் சித்திரவதை செய்வதன் மூலமே மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த எதிர் முரணான அல்லது யதார்த்தமான சூழலை விளங்கியிருக்கும் விசாரணையாளர்கள் துன்புறுத்தலின்போது தாம் தயாரிக்கின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடுமாறும் மிரட்டுகின்றனர்.


குறிப்பாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர் யுவதிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தேசத்துரோகம் என்கிற தலைப்பிலாகும். அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு இதுதான் நடக்கும் என்று துன்புறுத்தலின் மூலம் பயம் கொள்ளச் செய்யப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து மேலும் பலர் பயப்பிட வாய்ப்புண்டு என்பதும் இதன் எதிர்பார்ப்பாகும்.

உடல் ரீதியான சித்திரவதை மனிதனை மிகவும் துன்பத்துக்குள்ளாக்குவதுடன் அவனது மன நிலையிலும் பாதிப்பை உண்டுபண்ணுகிறது. உடல் ஊனமுற்று அதைத்தொடர்ந்து உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படும்போது புலிச் சந்தேகநபர்களின் எதிர்காலம் பூச்சியமாகிவிடுகிறது. இலங்க அரசு தமிழ் அரசியல் கைதிகளுக்கு அதுவே ஏற்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

மேலை நாடுகளில் கைது செய்யப்படும் ஒருவர் அவரது சட்டத்தரணி அவரைச் சந்திக்கும் வரையில் காவல்துறையினருக்கு எந்த வாக்குமூலத்தையும் அளிக்கமாட்டார். இலங்கையின் நிலையோ தலைகீழானது. ஒருவர் கைது செய்யப்பட்ட பின் அவரது குடும்பத்தினர் ஒரு சட்டத்தரணியை அவருக்குச் சார்பாக வாதிடுவதற்கு ஏற்பாடு செய்தால்கூடச் சாட்டுப்போக்குச் சொல்லி அவரை அந்த விடயத்தில் தலையிடாத வகையில் விசாரணையாளர்கள் செய்துவிடுகின்றனர். இது பெரியதொரு மனித உரிமை மீறலாகும்.

1983க்குப் பின்பான காலங்களில் காவல் நிலையங்களிலும் சிறைகளிலும் துன்புறுத்தல்களைச் செய்வதற்கென்றே தனியான பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை மஸ்கடே (இறைச்சிக்கடை) என்று அழைப்பதுண்டு. ஆனால் தற்போதைய நிலையில் சிறைச்சாலைகள் சிறைச்சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருப்பதால் சிறைகளில் துன்புறுத்தும் நிலை குறைவாகவுள்ளது. முன்பு சிறைகள் படையினரின் பொறுப்பிலேயே இருந்தன.

இலங்கையில் சித்திரவதைகளுக்குப் பெயர்போன இடங்களாக 4ஆம் மாடி (கொழும்பு), பலாகொட படைமுகாம், வெலிக்கடைச் சிறைச்சாலை, பூசா சிறைச் சாலை என்பன காணப்பட்டன. 1998க்கு முன்பான காலத்தில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே கைதாகும் நிலை இருந்தது. ஆனால் 1998க்குப் பின்பான காலப்பகுதியில் கைதானவருக்கு வேண்டியவர்கள், பெற்றோர், மனைவி, காதலி, தங்க இடம் கொடுத்தோர், அழைத்து வந்தோர், நண்பர்கள் எனப் பலரும் கைது செய்யப்பட்டதுடன் சந்தேகநபர்க ளுக்கு முன்பாக வைத்து அவர்கள் சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டனர். இவ்வாறு கட்டாயப்படுத்திச் சிறைக்குக் கொண்டுவருபவர்களில் வயோதிபர்கள், கர்ப்பவதிகள், குழந்தைகள், பெண்கள் என உள்ளடங்கு வது பரிதாபகரமானதும் கண்டிக்கத்தக்கதுமாகும். (தொடரும்)



### ஆனையிறவுப் படைத்தளப் பொறுப்பு

1991ஆம் ஆண்டு மாசி மாதம் 10ஆம் நாள் ஆனையிறவு படை முகாமுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டேன். அந்தத் தளம் வடக்குத் தெற்காக 6 கிலோ மீற்றர் நீளத்தையும் கிழக்கு மேற்காக 3 கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்டது. ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட சிறிய கோட்டை ஒன்றும் இருந்தது. உப்பு உற்பத்தி செய்யப்படும் உப்பளங்கள் இருந்தன. முதன்மை வீதிக்குக் குறுக்காகக் காவல்துறையினரின் சோதனைச் சாவடி ஒன்றிருந்தது. இந்தியாவிலிருந்து தடை செய்யப்பட்ட பொருள்களை வல்வெட்டித்துறைக்கூடாகக் கடத்தி வந்து அங்கிருந்து கொழும்புக்கு அவற்றைக் கடத்திச் செல்வதைத் தடை செய்வதும், தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப் படும் தடை செய்யப்பட்ட பொருள்களை வல்வெட்டித் துறை ஊடாக இந்தியாவுக்குக் கடத்துவதைத் தடுப்பதும் அந்தக் காவலரணின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதைவிட வடக்குக்கும் தெற்கிற்குமான செய்திப் பரிமாற்றத்துக்காக 300 அடி உயர இரும்புத் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றுமிருந்தது. அதைக் காப்பாற்றுவதும் ஆனையிறவுப் படையினரின் கடமைகளில் ஒன்றாக இருந்தது.

### கிளிநொச்சிப் படை முகாமுக்கான பாதுகாப்பு

கிளிநொச்சிப் படை முகாமைப் புலிகள் தாக்குவதிலிருந்து பாதுகாப்பதற்காக 76 மில்லி மீற்றர் தூரத் தாக்கும் ஆயுதங்களையும், 81 மில்லி மீற்றர் மோட்டார்கள், ஈ.பி.எம். துப்பாக்கிகள், 20 மில்லி மீற்றர் ரக எறிகணைகள், 106 மில்லி மீற்றர் ரக எறிகணைகள் எனப் பல கனரக ஆயுதங்கள் ஆனையிறவில் முக்கிய இலக்குகளை நோக்கிப் பொருத்தப்பட்டிருந்தன. இதைவிட 600 படைச் சிப்பாய்கள் கடமையிலிருந்தனர்.

### 1991இல் ஆனையிறவு நிலமை

290 ரக வானூர்தி ஒன்றின் மூலம் வவுனியாவிலிருந்து பலாலி வான் படைத் தளத்துக்கு உணவுப் பொருள்கள், ஆயுதங்கள் என 3 ஆயிரம் கிலோ கிராம் பொருள்களைக் கொண்டுவந்து பின்னர் பலாலிலியிருந்து உலங்கு வானூர்திகள் மூலம் அவற்றை ஆனையிறவுக்குக் கொண்டுவரவேண்டியிருந்தது. தரைவழி, கடல் வழித் தொடர்புகள் புலிகளால் துண்டிக்கப்பட்டிருந்தன. இவ்வாறான வழங்கல் முறையால் 600 சிப்பாய்களுக்குரிய உணவு, மருந்துப்பொருள்கள், படை உபகரணங்கள் என எல்லாவற்றையும் கொண்டுவருவதில் சிரமம் இருந்தது. எல்லாவற்றையும்விடக் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு இருந்தது.


நான் பதவியேற்ற மாசி மாதம் ஆனையிறவைச் சுற்றியிருந்த ஏரியில் மழைநீர் நிரம்பியிருந்ததால் முகாமுக்குள் சிறிய கிணற்றை வெட்டி அதிலிருந்து எடுத்த நீரைச் சுத்திகரித்துச் சேமித்து வைத்தோம். குளிப்பது களப்பு நீரில். ஒரு சில மாதங்களில் கிழக்குப் பக்கக் கடல் நீரேரி வற்றிப்போனதால் முதன்மை வீதியை வெட்டி மேற்குப் புறத்திலிருந்து கடல் நீரை கிழக்குப் பக்கத்துக்குத் திறந்து விட்டுச் சிலகாலம் குளித்தோம்.

பலாலியில் கேணல் அன்ரன் விஜேந்திரவும், அனுராதபுரம் கட்டளை முகாமில் டென்சில் கொப்பேகடுவவும் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி எனக்கு அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருந்தனர். டென்சில் கொப்பேகடுவ என் மீதும் ஆனையிறவுப் படை முகாம் மீதும் அதிக அக்கறை வைத்திருந்தார். ஆனையிறவு முகாம் புலிகளின் கைக்கு மாறினால் புலிகள் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்குமான தரைவழிப் பாதையைத் திறக்கவும் தமது அணிகளையும் படைத் தளவாடங்களையும் அங்குமிங்கும் மாற்றிக்கொள்ளவும் இலகுவாகிவிடும் என்பதும் பலாலி உட்பட குடாநாட்டிலிருந்த படை முகாம்களைப் பாதுகாக்க முடியாத சூழல் ஏற்படும் என்பதும் டென்சில் கொப்பேகடுவிடம் இருந்த மூலோபாயமாகும். அதற்கு ஆனையிறவு முகாமைத் தக்க வைக்கும் ஆற்றல் என்னிடம் இருப்பதாக நம்பினார். ஆனையிறவு முகாம் தாக்குதலுக்குள்ளானால் 4 மணித்தியாலங்களில் தான் ஆனையிறவில் நிற்பேன் என்று டென்சில் கொப்பேகடுவ கூறுவார்.

(தொடரும்)

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.




04

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

இந்தியாவுக்கு மிக அருகாமையில் இலங்கையின் புவியியல் அமைவிடம், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான அரசியல், பண்பாட்டுத் தொடர்புகள் என்பன காரணமாக இந்தியாவில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் இலங்கையைப் பாதிக்க வல்லனவாகும். சுதந்திர இந்தியாவில் கூர்மையடையத் தொடங்கிய மொழிப் பிரச்சினைகளும், தேசிய இனப் பிரச்சினைகளும் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கின. பிரித்தானியர் இந்தியாவை ஆண்ட காலத்தில் தமது நிர்வாகத் தேவைகளின் பொருட்டு பிரதேச-நிர்வாக அலகுகளைத் தோற்றுவித்திருந்தனர். இங்கு மொழி வேறுபாடுகளோ, தேசிய இன வேறுபாடுகளோ கருத்திற்கு எடுக்கப்படாது ஒரு பிரதேச நிர்வாக அலகுக்குள் பல இன, மத, மொழிக்கூறுகள் இடம்பெற்றன. உதாரணமாகப் பஞ்சாப்பை எடுத்துக் கொண்டால் அந்த ஓர் அலகுக்குள் இந்து, முஸ்லிம், சீக்கியர் எனும் மூன்று பெரும் மதங்களும் அடங்கின. அப்படியே பஞ்சாபி, ஹிந்தி போன்ற மொழிகளும் அடங்கின. மெட்றாசை எடுத்துக்கொண்டால் இந்து மதத்தின் உட்பிரிவுகள் (சைவம், வைணவம்) இருந்தன. தமிழ், தெலுங்கு போன்ற மொழிப்பிரிவுகள் இருந்தன. இத்தகைய பின்னணியில் தேசிய இனங்களிடையே குறிப்பாக மொழி, மதம் என்பவற்றின் அடிப்படையில் பிரச்சினைகள் எழுந்தன. மெட்றாசிலிருந்து ஆந்திரா பிரிந்து தனி மாநிலமாக விரும்பியது.

சமையல் சமையல்



# இறால் – கோவா வறை

திருக்கை வறை, நண்டு வறைபோல இறாலில் வறை செய்துண்ணும் பழக்கம் பலருக்கு உண்டு. இறால் வறை என்பது கோவாவுடன் மிகச் சிறிய இறாலைக் கலந்து வறுத்துத் தயாரிக்கப்படுகிறது. இதற்குப் பயன்படுத்தப்படும் மிகச் சிறிய இறாலைக் கூனி இறால் என்கிறார்கள். இதனால் கூனி இறால் வறை என்றும் கூனி வறை என்றும்கூட இதை அழைக்கிறார்கள்.

நண்டு, திருக்கை ஆகிய கடலுணவுகளில் ஆக்கப்படும் வறையைப்போல இருந்தாலும் இறால் - கோவா வறைக்குரிய ருசி தனித்துவமானது. பொரித்துண்ணும்போது இறால் தருகிற சுவையைவிடவும் இந்த இறால் வறையின் சுவை தூக்கலாக இருப்பதால் பலர் இதை விரும்புகின்றனர். ஒரு தடவை சுவைத்தவர்களைத் தனது சுவையால் கிறங்கச் செய்யும் தன்மை இந்த இறால் வறைக்குண்டு. ஒரு தடவை இந்த இறால் வறையைத் தயாரித்துண்டீர்களானால் நீங்களும் நிச்சயம் இதற்கு அடிமையாகித்தான் விடுவீர்கள்...!



**தேவையான பொருள்கள்**

கூனி இறால் - கால் கிலோ
கோவா - கால் கிலோ
தேங்காய்த் துருவல் - கைப்பிடியளவு
பெரிய வெங்காயம் - 2
செத்தல் மிளகாய் - 4
கடுகு, சீரகம் ஆகியன தலா ஒவ்வொரு கரண்டியளவு
தேங்காய் எண்ணெய், உப்பு ஆகியன தேவைக்கேற்ப
கறிவேப்பிலை - வாசனைக்கு
மஞ்சள் தூள் - சிறிதளவு

**எவ்வாறு தயாரிப்பது...?**

முதலில் இறாலைச் சுத்தப்படுத்திக் கோது நீக்கிக் கொள்ளுங்கள். கோவாவை நறுக்கி வைத்திருங்கள். வெங்காயம், செத்தல் மிளகாய்களையும் நறுக்கி வைத்திருங்கள். தாச்சி ஒன்றை அடுப்பில் வைத்துச் சிறிது தேங்காய் எண்ணெய் விட்டு அதில் சீரகம், வெங்காயம், செத்தல் மிளகாய்த் துண்டுகள், கடுகு ஆகியவற்றைப் போட்டுத் தாளியுங்கள். அத்தோடு கோவாவைப் போட்டுக் கலந்து சிறிது நேரம் அவிய விடுங்கள். கோவா அவிந்து அதன் பச்சைய வாசனை மாறியதும் மஞ்சள் தூள் மற்றும் தேங்காய்த்துருவல் ஆகியவற்றைக் கலந்து பிரட்டி எடுங்கள். பின்னர் இறாலைச் சேர்த்துக்கொள்ளுங்கள். உப்பைச் சரிபார்த்து ஒரு பிரட்டல் பிரட்டிக் கொள்ளுங்கள். இடையில் வேண்டுமானால் சிறிது எண்ணெய் சேர்க்கலாம். கோவா அவியும்போது நீர் வெளிவிடும் என்பதால் எண்ணெய்யைப் பார்த்துச் சேர்ப்பது நல்லது. வறுவல்போல வந்ததும் இறக்கிப் பரிமாறுங்கள். சுவையில் மிஞ்சிய இறால் - கோவா வறை உங்களுக்கு நிச்சயம் பிடித்துக்கொள்ளவே செய்யும்.

பொட்டி ஸ்ரீராமுலு ஆந்திர மாநிலக் கோரிக்கையை முன்வைத்து 1952ஆம் ஆண்டு சாகும் வரை பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார். மத்திய அரசு இவரது கோரிக்கைக்குச் செவி சாய்க்க மறுத்தது. நாட்கள் அதிகரிக்க அதிகரிக்க வெகுஜனப் போராட்டங்களும் வளர்ந்து சென்றன. ஆனால், 58ஆவது நாள் ஸ்ரீராமுலு காலமானார். இவரது இறப்புச்செய்தி கேட்டு வெகுஜனக் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் வெடித்தன. சுதந்திரத்தின் பின் இந்தியா கண்ட மிகப் பெரும் வெகுஜனப் போராட்டமாக இது அமைந்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீராமுலு காலமாகி நான்காம் நாள் அரசு பணிந்து ஆந்திரக் கோரிக்கைக்கு உடன்பட்டது. இந்த வரிசையில் பஞ்சாப்பிலும் பின்பு நாட்டின் பல பகுதிகளிலும் மொழி அல்லது மத அடிப்படையிலான போராட்டங்கள் வெடித்தன. இவற்றின் விளைவாக 1953ஆம் ஆண்டு மார்கழி மாதம் மாநில சீரமைப்புக் கமிசன் மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிசனின் பரிந்துரைக்கேற்ப 1956ஆம் ஆண்டு பிரதேச நிர்வாக அலகுக்குப் பதிலாக மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் ஹிந்தி திணிப்புக்கு எதிரான தென்னிந்தியத் தமிழ் மக்களின் போராட்டமும், திராவிட நாட்டுக் கோரிக்கையும் போராட்டங்களும் என்பனவெல்லாம் இணைந்து இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் போராட்டங்களைத் தூண்டின. தமிழ் பேசும் மக்கள் வெகுஜனப் போராட்டங் களுக்குத் தயாராயிருந்தனர் என்பதை 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் தெளிவாக வெளிக்காட் டியது. ஆனால், சமஷ்டிக் கட்சி அகிம்சைப் போராட்டத்தை அதற்குரிய உச்சம்வரை முன்னெடுத்துச் செல்லவில்லை.

1956ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் சில மணித்தியாலங்கள் இருந்த சத்தியாக்கிரகமும் 1956ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருமலை யாத்திரையும், 1961ஆம் ஆண்டு மேற்கொண்ட இரு மதங்கள் தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டமுந்தான் சமஷ்டிக் கட்சி மேற்கொண்ட முக்கிய அகிம்சைப் போராட்டங்களாகும். பொட்டி ஸ்ரீராமுலுவின் அகிம்சைப் போராட்டத்தையும் ஆந்திர மக்களின் எழுச்சிகளையும் சமஷ்டிக் கட்சியினரால் மனதளவில் எட்டிக்கூடப் பார்க்க முடியவில்லை. அகிம்சைப் போராட்டங்கள் அதற்குரிய எல்லைகளை எட்டவில்லை என்பதை விடவும் அதற்குரிய தொடங்கங்களைக்கூட சமஷ்டிக் கட்சி உண்மையான அர்த்தத்தில் தொட்டிருக்கவில்லை என்று பெருமளவு கூறலாம்.

அன்றைய காலகட்டத்தில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்ததில் சமஷ்டிக் கட்சிக்கு ஒரு தனி வரலாற்று முக்கியத்துவமுண்டாயினும் அக்கோரிக்கைக்கான போராட்டங்களில் அது சிறப்பிடம் பெறத் தவறிவிட்டது.

சமஷ்டிக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் பகுதிநேர அரசியல்வாதிகளாக இருந்தமை இதில் ஒரு முக்கிய குறைபாடாகும். பகுதிநேர அரசியல் வாதிகளால் வெற்றிகரமான போராட்டங்களை நடத்தமுடியாதென்பதும், அவர்கள் போராட்டத்தில் அர்ப்பணத்துடன் செயற்பட முடியாதென்பதும் இதில் வெளிப்படையான உண்மைகளாகும். (தொடரும்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

41



## தலைக்கு மாத்திரம் ஏன் கவசம்...!

உடலில் எத்தனை அங்கங்கள் இருந்தாலும் மோட்டார் சைக்கிள் பயணத்தின்போது தலைக்கு மாத்திரம்தான் தலைக்கவசம் போடுகிறார்கள்... அது ஏன்...? மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் தலைக் கவசம் அணியவேண்டியது கட்டாயம் என்று நமது அரசு சட்டம் போட்டிருக்கிறதே... தலைக்கு மாத்திரம் ஏன் அரசு கவசத்தைக் கட்டாயமாக்கியுள்ளது...? உடலில் வேறு அங்கங்களுக்குக் கவசம் அணிய வலியுறுத்தாதது ஏன்...? தலைக்கு ஏன் அவ்வளவு பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக்கிறது...? இதற்கெல்லாம் இந்தப் பகுதியில் ஏன் அப்படி என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

உடலில் உள்ள ஏனைய அங்கங்களைவிடவும் தலைக்கு முக்கியம் அளிப்பது ஏன் என்றால், அதற்குள்தான் மூளை இருக்கிறது. அதனால்தான் தலைக்குக் கவசம் முக்கிய தேவையாக உள்ளது. ஏனைய அங்கங்களான கை, கால், இடுப்பு என்பன விபத்துகளின்போது உடைந்து காயங்களுக்கு உள்ளானாலோ முற்றிலுமாகச் சேதங்களுக்கு உள்ளானாலோ கூட உயிர் வாழ முடியும். ஆனால், தலை அடிபட்டு மூளை பாதிக்கப்பட்டால் அவ்வளவுதான். மூளை முக்கியமானது. பாதுகாக்கப்படவேண்டியது. உடலின் ஏனைய அங்கங்களில் ஏற்படுகிற பாதிப்புகளைவிட மூளையில் ஏதாவது பாதிப்புகள் ஏற்பட்டால் சரிப்படுத்துவது சிரமம். முட்டைக்குள் உள்ள வெண் திரவம், மஞ்சள் கருவைப்போலதான் மூளையும் மூளியமும் ஒரு வகைத் திரவத் தன்மையில் சவ்வு நிலைப் பொருள்காக இருக்கின்றன. இதனால் மூளைப் பாதிப்புக் குறித்த சிகிச்சைகளுக்குச் செலவுகள் அதிகம் என்பதற்கு அப்பால் அது குறித்த நிபுணத்துவம் - மருத்துவ வளர்ச்சி அடையவில்லை என்பதும் மற்றொரு காரணம். உதாரணத்துக்கு விபத்துக்களின்போதான கை, கால், இதர என்பு முறிவுகளுக்குச் சிகிச்சை அளிப்பது என்பது தலையில் ஏற்படுகின்ற பாதிப்புகளைச் சீர்செய்வதைவிடவும் மருத்துவர்களுக்குச் சுலபமானதாக இருக்கிறது. இதயம் செயல் இழந்தாலோ பாதிக்கப்பட்டிருந்தாலோ அதை மாற்றவும் அதற்குச் சிகிச்சையளிக்கும் நிலைக்கும்கூட மருத்துவ உலகம் வளர்ந்திருக்கிறது. இதய மாற்று அறுவைச் சிகிச்சைகள் வளர்ந்து வருகின்றன. ஆனால், மூளை மாற்றுச் சிகிச்சை

சாத்தியமேயில்லை. மூளை செயல் இழந்தால் நிலமை அவ்வளவுதான். இதனாலேயே இதயத்தையோ, உடலின் ஏனைய அங்கங்களையோ பாதுகாப்பதைவிடவும் அதிக சிரத்தையுடன் மூளையைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் தலைக்குக் கவசம் போடுவது கட்டாயமானதாக இருக்கிறது.

மூளையின் முக்கியத்துவத்தை மனிதர்கள் அறிந்துகொள்வது முக்கியமானது. இதயம், நுரையீரல், கண், காது, மூக்கு என எல்லாவற்றையும் மாற்றிச் சிகிச்சையளிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்ற நவீன மருத்துவ உலகால் மூளையை மாற்ற முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். உடலின் அனைத்துக் கட்டுப்பாட்டையும் பேணி உயிரைக் காத்து வைத்திருக்கின்ற பணியைச் செய்யும் முக்கியமான அங்கம் மூளை. அதனால்தான் கவசமிட்டு அதைக் காப்பது கட்டாயமானதாக இருக்கிறது.

# பேராசிரியர் சிற்றம்பலத்துக்கு எதிரான துரும்புச் சீட்டு...!

நாகராசா

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய தூண்களில் ஒருவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம். அந்தக் கட்சி விடயத்திலும் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோர் குறித்தும் எதையாவது மேற்கொள் காட்டுவதாயின் வெள்ளிவிழா மலரைக் கையில் எடுக்கும் பழக்கம் கொண்டவர். அமிர்தலிங்கத்தின் மறைவால் அதிகம் பாதிக்கப்பட்ட சிற்றம்பலம் அமிர்தலிங்கத்தின் உடல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் தீயுடன் சங்கமித்தபோது அந்த இடத்தைவிட்டு அகலாது நின்றார் என்று சொல்லப்படுகிறது. போர் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சுகள் சிலவற்றுக்காகச் சீனா வரை சென்றவர். தமிழ் அரசுக் கட்சியை அழியவிடாது பாதுகாத்த பெருமையும் இவருக்குண்டு.

இத்தகைய முக்கியமான ஒருவருக்குத் தமிழ் அரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டுக்கான தொடக்க விழா மாநாட்டில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளிக்கவில்லை. பேராசிரியர் சிற்றம்பலம் அந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தால் தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய அரசியல் போக்கையும் அதிலுள்ள நிறைகுறைகளையும் சரியாக மதிப்பீடு செய்திருப்பார் என்கிற எதிர்பார்ப்புப் பலருக்கு இருந்தபோதிலும் அது தவிர்க்கப்பட்டுவிட்டது.



**தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் ஒருவர்**

2015ஆம் ஆண்டுத் தேர்தலின்போது தமிழ் அரசுக் கட்சியினர் தயாரித்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசையில் பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தேர்தல் முடிந்ததும் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற சாந்தி சிறிஸ்கந்தராஜாவுக்கும் துரைரட்ணசிங்கத்துக்கும் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. பேராசிரியர் சிற்றம்பலம் தவிர்க்கப்பட்டார். இந்தச் சம்பவத்தின் பின்னர் பேராசிரியர் சிற்றம்பலம் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து ஓரம் கட்டப்பட்டார். அதன் தொடர்ச்சியாகவே அவர் உரையாற்றியிருக்க வேண்டிய அந்தக் கட்சியின் 75ஆவது ஆண்டு தொடக்க விழா மாநாட்டில் வரலாற்றுத்துறைப் பேராசிரியரான சி.பத்மநாதன் மேடையேற்றப்பட்டுள்ளார். அவருக்கும் தமிழ் அரசுக்கட்சிக்கும் எவ்வித தொடர்புகளும் இருக்கவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராகக் கடமையாற்றி வருபவர் பத்மநாதன்.

1990ஆம் ஆண்டளவில் தனது குடும்பத்துடன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பேராசிரியர் பத்மநாதன் சங்குப்பிட்டியூடாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முயற்சித்தபோது புலிகள் அவரைத் தடுத்தனர். அதன் பின்னர் மிகவும் சிரமப்பட்டுப் புலிகளிடம் பயண அனுமதி பெற்றுப் பேராதனை சென்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

பத்மநாதன் சிறிலங்கா சுதந்திக் கட்சியுடன் தனக்கிருந்த உறவைப் பயன்படுத்தி சிறிமாவுடனும் சந்திரிகாவுடனும் தனிப்பட்ட தொடர்புகளைப் பேணித் தன்னைத் தெற்கில் நிலைநிறுத்தினார். அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பதவியைப் பெற்றார்.

# பகிர்ந்தால் கிடைக்குமா வரம்...??

நித்தி

சுமார் 40 வருடங்களுக்கு முன்பு யாரோ ஒருவர் எனது முகவரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், "இந்தக் கடிதத்தை வாசித்த பின்னர் இதுபோன்று 15 கடிதங்களை எழுதி உங்களுக்குத் தெரிந்த 15 பேருக்கு அனுப்பவும். அவ்வாறு அனுப்பினால் 2 வாரத்துக்குள் நீங்கள் எதிர்பார்க்கும் விடயத்தில் நல்ல பலன் கிடைக்கும். இதைப் பிரதி செய்து அனுப்பாது உதாசீனம் செய்பவர்களுக்குக் கடவுளின் தண்டனை கிடைக்கும் - என எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு அனுப்பாதவர்கள் சிலருக்குக் கடவுள் கொடுத்த தண்டனைகள் பற்றியும் அதில் எழுதப்பட்டிருந்தது. அதை நான் அனுப்பவில்லை. இப்போது உயிருடன், நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து இதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.




தற்போது இதே பாணியில் முகநூலில் கடவுள் படங்களைப் பதி வேற்றி உடனே பகிர்ந்தால் நன்மை கிடைக்கும் என்று பலரும் பதிவிடு கிறார்கள். இத்தகைய விடயங்கயைச் சிலர் தமது முகநூல் பக்கங்களில் தொடர்ச்சியாகவே பதிவேற்றி வருகின்றனர். அதைப் பலர் பகிர்வதில்லை. அவ்வாறு பகிராதவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை என்பதை வைத்து அவர்களின் கடவுளுக்கு எந்தச் சக்தியும் இல்லை என்ற முடிவுக்குப் பலர் வந்துவிடுகின்றனர்.

இவ்வாறான படங்களைச் சமூக வலைத்தளங்களில் பகிர்வதால் நாம் நினைத்தவை கிடைக்கும் என்றால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி, மின்சாரப் பிரச்சினை, தொழில்வாய்ப்பு என எல்லாமும் சீர்செய்யப்பட்டிருக்கும். தனிநபர்கள் இருந்த இடத்திலேயே அருள் பெற்றிருப்பார்கள்.




### கோவில்கள் தேவையில்லை

முகநூலில் கடவுள் படங்களைப் பகிர்வதால் தனிமனிதனும் நன்மை அடைய முடியுமானால் கோவில்கள், பூசைகள், யாகங்கள் என எதுவும் தேவையில்லை. இந்த முறையைப் பின்பற்றி உலகு முழுதும் வறு

தமிழ் பேராசிரியர்கள் பலர் தமிழ்த் தேசியம் பேசியபோதிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப்போல தமது பதவிகளை மேம்படுத்திக் கொள்ளவும் புலமைப் பரிசில்களைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லவும் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டார்கள். இந்த வரிசையில் பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோரைக் குறிப்பிட முடியும். இவர்கள் எவரும் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் கலந்துகொள்ளாது தந்திரமாகத் தவிர்த்ததையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### 2016 தைப்பொங்கல் விழாவில் நன்றிக்கடன்

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணம் - வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த தைப்பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக அப்போதைய அரச தலைவர் சந்திரிகா வந்திருந்தார். அவர் மண்டபத்துக்குள் நுழையும் பாதையில் ஓரமாக அமர்ந்திருந்த பேராசிரியர் பத்மநாதன் மட்டும் சந்திரிகாவைக் கண்டதும் எழுந்து நின்று நேருக்கு நேர் முகம்கொடுத்து வணங்கி வரவேற்றார். சந்திரிகா பேராசிரியர் பத்மநாதனுக்குச் செய்த உதவிகளின் நன்றிக் கடனாகவே இது நடந்தது என்று அப்போது சிலாகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியத்துக்கும் பத்மநாதனுக்கும் எந்தவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் அவர் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் வகையில் வேட்டி கூடக் கட்டுவதில்லை. இங்கிலாந்தில் கற்ற அவர் தன்னை ஒரு கனவானாகக் காட்டிக்கொள்பவர்.

தமிழர் தாயகம் தொடர்பில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பத்மநாதன் வாய் திறப்பதில்லை. தொல்பொருள் ஆராய்ச்சிகளிலும் ஆங்காங்கும் கிடைத்த கல்வெட்டுகளையும் இந்து, சைவச் சிலைகளையும் வைத்து இந்த நூற்றாண்டில் இந்தப் பகுதியில் இந்து சைவ வழிபாடுகள் நடந்தன என்பதைப் பொதுவாகக் கூறுவாரே தவிர தமிழர் தாயக மண்ணை முஸ்லிம்களும் சிங்களவர்களும் கையகப்படுத்தும் உண்மையை ஆணித்தரமாகக் கூறமாட்டார். அவ்வாறு கூறினால் ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட பதவிகள் உடனடியாகப் பறிக்கப்படும் என்று அவருக்குத் தெரியும்.

பேராசிரியர் சிற்றம்பலம் உரையாற்றியிருக்கவேண்டிய உரித்துடைய நிலையில் அவரைத் தவிர்ப்பதற்காகப் பேராசிரியர் பத்மநாதன் இழுத்து வந்து விடப்பட்டிருக்கிறார்.

மையை ஒழித்துவிட முடியும். மாணவர்கள்கூட பரீட்சைக்காகப் படிக்கவேண்டிய அவசியம் இருக்காது. கடவுள் படங்களை முகநூலில்




பகிர்ந்துவிட்டுப் பரீட்சை எழுத முடியும்.

எந்தவொரு விடயத்திலும் மனிதனின் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புகளே மனித இனத்தைக் காப்பாற்றியிருக்கின்றன. முகநூலில் பகிர்வதால் எல்லாம் நடந்துவிடும் என்றால் கொரோனாத் தொற்றிலிருந்து தப்புவதற்கு இரண்டு வருடகாலம் தடுப்பூசியைக் கண்டு பிடிக்கும்வரை காத்திருக்கவேண்டியிருந்திருக்காது. பல லட்சக்கணக்கானவர்கள் உலகு முழுதும் இறந்திருக்கவும் தேவையில்லை.

அதிதிறன் பேசிகளைக் கண்டு பிடித்தது, முகநூலைக் கண்டு பிடித்தது மனிதர்கள். அவற்றை வைத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் செயற்படுவதால் மக்கள் மூடர்களாக இருக்கிறார்கள். எந்த விடயத்தையும் புத்தி பூர்வமாக அணுகவும் அறிவை வளர்க்கும் விடயங்களை முகநூலில் பகிர்வதன் மூலமும் பல சிறப்பான தகவல்களைப் பலரும் அறிய முடியும்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை மூட நம்பிக்கைக்குள் தள்ளுவதைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறான முகநூல் பதிவுகள் மாணவர்கள் மத்தியில் பிழையான சிந்தனைகளும் பிழையான அணுகுமுறைகளும் வளர வழிவகுக்கின்றன.

இதைத் தடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும். தற்போது இலங்கை மக்கள் மத்தியில் மிகவும் ஆபத்தான போதைப் பொருள் பாவனைகள் இடம் பெறுகின்றன. அதை இல்லாது செய்வதற்கு ஏதாவது கடவுள் உண்டா? அவ்வாறிருந்தால், அதை இலங்கையர் அனைவரும் பகிர்ந்து ஒரு வாரத்துக்குள் போதைப் பொருள் பாவனையை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிக்கலாமே...?




19

## வாரம் ஒரு சொல்...!

### தோய்

தோய் என்கிற சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிற போதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது.

"அந்த உடுப்பை அடித்துத் தோய்"

"இந்தக் கோடாலியைத் தோய்ந்து தா"

"அவளிப்பதான் செத்தவீட்டால வந்து தோய்ஞ்சு போட்டு இருக்கிறாள்"

"அவை ரெண்டுபேரும் இன்டைக்குப் பள்ளிக்கூடத்தால வரேக்க நல்லா நனைஞ்சு தோய்ஞ்சுதான் வந்து சேந்தினம்"

"கரைத்த மாவில தோய்த்துச் சுடும் பலகாரம்தான் ருசியம்"

"அந்த ஆணி நட்டுக்களை ஒயிலில தோய்த்து வைத்தால் கறள் பிடிக்காமல் இருக்கும்."

"திரிச்சீலையை எண்ணையில தோய்த்து வை" எனப் பேச்சு வழக்கில் பல சந்தர்ப்பங்களில் பல அர்த்தங்களுடன் இந்தச் சொல் பயன்பாட்டில் உள்ளது.

# காவல்துறைக்கு முழுமையான மறுசீரமைப்பு அவசியம்

**பெ.கண்ணன்**

ஆங்கிலேயரின் லண்டன் பெருநகரக் காவல்துறையை உலுக்கி, தலைகுனியச் செய்த குற்ற நிகழ்வு ஒன்று கடந்த ஆண்டு நிகழ்ந்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக ஊரடங்கு நடைமுறையில் இருந்த 2021-ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் ஒரு மாலைப் பொழுதில் தெற்கு லண்டன் சாலை ஒன்றில் விற்பனை நிர்வாகியாகப் பணியாற்றி வந்த இளம்பெண் ஒருவர் தனது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்.



அந்த நேரத்தில் அலுவல் முடித்து, காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த லண்டன் பெருநகர காவல்துறையைச் சேர்ந்த ஆண் அதிகாரி ஒருவர் அந்தப் பெண்ணை வழிமறித்தார். தனது அடையாள அட்டையை அந்த பெண்ணிடம் காட்டி, பொய்யான குற்றச்செயல் ஒன்றிற்காக அவரைக் கைது செய்கிறார் எனக் கூறி, அவரின் கைகளில் விலங்கு மாட்டி, அவரைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு, லண்டன் புறநகர் பகுதியில் உள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அந்தப் பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி, பின்னர் கழுத்தை நெரித்து கொலை செய்தார் அந்த காவல் அதிகாரி. இறந்துபோன பெண்ணின் மீது பெட்ரோல் ஊற்றி எரித்த அந்த காவல் அதிகாரி, அந்தப் பெண்ணின் கைப்பேசியையும், உடைமைகளையும் அருகிலுள்ள நீரோடையில் போட்டு, தான் செய்த குற்றச் செயலுக்கான ஆதாரங்களை மறைத்துள்ளார்.

கண்காணிப்பு கேமராவின் பதிவுகள், கைப்பேசி மூலம் பெறப்பட்ட தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் லண்டன் பெருநகர காவல்துறை புலன்விசாரணையைத் தொடங்கியது. "பெண்ணைக் காணவில்லை" எனப் பதிவான அந்த வழக்கில் துரிதமாக புலன் விசாரணை மேற்கொண்ட லண்டன் காவல்துறை, அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்று, பாலியல் வன்முறை செய்து, கொலை செய்த காவல் அதிகாரியை கைது செய்து, சிறையில் அடைத்தது.

அந்த காவல் அதிகாரி மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை, லண்டன் மத்திய குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர், 2021-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கிய நீதிமன்றம், தண்டனை காலத்தில் குற்றவாளிக்கு 'பரோல்' எனப்படும் விடுப்பு வழங்காமல், வாழ்நாள் முழுவதும் அவர் சிறையில் கழிக்க வேண்டுமென்று தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

குற்றம் நிகழ்ந்த ஏழு மாதத்திற்குள் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும் வகையில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் துறையின் துரித செயல்பாடுகள் குறித்து பாராட்டுகளோ, இளம்பெண்ணை இழந்து தவிக்கும் அப்பெண்ணின் குடும்பத்திற்கு இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையோ பிரிட்டனில் எழவில்லை.

மாறாக, "நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவல்துறையினர் பெண் சமூகத்திற்கு

எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடக் காரணம் என்ன" என்ற கேள்வியே பிரிட்டனில் எழுந்தது.

"லண்டன் நகர சாலைகளில் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் பாதுகாப்பில்லை" என்று கூறி லண்டன் மேயர் தனது கண்டனத்தை வெளிப்படுத்தினார். "பொதுமக்களிடத்தில் நம்பிக்கையை இழந்துவரும் நெருக்கடியான சூழலை லண்டன் பெருநகர காவல்துறை உணர்ந்துகொண்டதற்கான அறிகுறியைக் காணமுடியவில்லை' என பிரிட்டனில் இருந்து வெளிவரும் "தி கார்டியன்' நாளிதழ் தலையங்கம் எழுதியது.

இந்தக் குற்ற நிகழ்வு நடைபெற்ற காலகட்டத்தில் லண்டன் பெருநகர காவல் ஆணையர் பொறுப்பில் இருந்த பெண் காவல் உயரதிகாரி இச்சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேற்கொள்ளப்படவில்லை என்பதும், பணியில் இருக்கும் காவல் அதிகாரிகள் சிலர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதும், சிலர் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுடன் தொடர்பில் இருப்பதும் சமூக செயற்பாட்டாளர்களின் கள ஆய்வில் தெரியவந்துள்ளது.

காவல்துறையில் ஒரே சமயத்தில் அதிக எண்ணிக்கையில் ஆள் சேர்ப்பு நடைபெறுவதால், தேர்வு செய்யப்பட்டவர்களின் குற்றப் பின்னணி குறித்து முழுமையாக விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் கள ஆய்வில் தெரியவந்துள்ளது.

பொதுமக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் லண்டன் பெருநகர காவல்துறையில் தேவையான மாற்றங்கள் கொண்டுவரப்படும் என்றும், குறிப்பாக பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்

**இருநூறு ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வந்த லண்டன் பெருநகரக் காவல் அமைப்பு, தற்போது பிரிட்டன் மக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.**

2018ஆம் ஆண்டில் லண்டன் பெருநகர காவல்துறையில் பணி நியமனம் செய்யப்பட்டபோது, இந்தக் குற்றவாளியின் குற்றப் பின்னணி குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளாததும், காவல்துறையில் பணியிலிருந்தபோது செய்த சில குற்றச் செயல்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காததும், காவல் பணியில் இரண்டாம் ஆண்டின் இறுதியில் அவரது தகுதி குறித்து ஆய்வு மேற்கொள்ளாமல், அவரைத் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கி, முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு நியமனம் செய்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளன.

லண்டன் பெருநகர காவல்துறையின் செயல்பாடுகள் குறித்து சமூக செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட கள ஆய்வின் அறிக்கை, லண்டன் செய்தி ஊடகங்களில் கார்த்திகை மாதத்தில் வெளியாகியுள்ளது.

காவல்துறையில் பணி நியமனம் செய்யப்பட்ட சிலரின் குற்றப் பின்னணி குறித்து முறையான ஆய்வு

ளப்படும் என்றும் நாட்டு மக்களுக்கு பிரிட்டன் உள்துறை செயலர் உறுதியளித்துள்ளார்.

1829ஆம் ஆண்டு பிரிட்டன் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட "மெட்ரோபாலிடன் காவல் சட்ட"த்தின் அடிப்படையில் செயல்பட்டுவரும் லண்டன் பெருநகர காவல் அமைப்பு, உலக நாடுகள் பலவற்றில் அமைக்கப்பட்டுள்ள காவல் அமைப்புகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது. இலங்கைக்கும்கூட.

இருநூறு ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வந்த லண்டன் பெருநகரக் காவல் அமைப்பு, தற்போது பிரிட்டன் மக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. அதைத் தொடர்ந்து, லண்டன் பெருநகர காவல் அமைப்பில் உரிய மாற்றங்கள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1866ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்ட காவல் சட்டத்தை அடித்தளமாகக் கொண்டு இலங்கையில் காவல்துறை இயங்கி வருகிறது. பிரிட்டிஷ் காலனியாத்திகத்திலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர் இலங்கை காவல் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் வேலியே பயிரை மேய்வது போன்று காவல்துறையில் பணிபுரியும் ஒருசிலர் கொடுங்குற்றச் செயல்களில் ஈடுபடும் சம்பவங்கள் நம்நாட்டில் தொடர்ந்து நிகழ்கின்றன. அவை தண்டனைக்கு உள்ளாக்கப்படாமல் அத்தகையவர்கள் பேணிப் பாதுகாக்கப்படும் நிலைமை தொடர்கின்றது. இதற்கு போர் ஒரு காரணமாக நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வந்தது.

நள்ளிரவில் சாலையில் நடந்து சென்ற பெண்ணை வழிமறித்து, பாலியல் துன்புறுத்தல் செய்த குற்றத்திற்காக ரோந்து காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டதும், வர்த்தகர் ஒருவரைக் கடத்திச் சென்ற குற்றச் செயலுக்காக காவல் ஆய்வாளர் ஒருவர் கைது செய்யப்பட்டதும் கடந்த ஓராண்டு காலத்தில் நம் மாநிலத்தில் நிகழ்ந்துள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மல்லாகம் காவல் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த ஒருவர் இளைஞன் ஒருவரை தடுப்புக் காவலில் வைத்து அடித்துக் கொன்றதற்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார். அதே போன்று கொலைக் குற்றம் தொடர்பில் காவல் உயரதிகாரி ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பெண்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்களும் காவலர்களுக்கு எதிராகப் பதியப்பட்டுள்ளன. காவல்துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பெண்கள் சிலர், காவல்துறையிலுள்ள சில ஆண்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

போர்க் காலங்களில் காவல்துறையினரின் செயல்பாடு மற்றும் அவர்கள் குற்றவாளிகளைச் சித்திரவதை செய்வது என்பன எப்போதும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. பாலியல் துன்புறுத்தல், போதைப் பொருள் விற்பனைக்குத் துணை போவது போன்ற குற்றங்களில் ஈடுபடும் காவல்துறையினரை கைது செய்து, அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதோடு மட்டும் காவல்துறையின் கடமை முடிந்துவிடுவதில்லை. சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்க வேண்டிய காவல்துறையினர் குற்றச்செயல்களில் ஈடுபடக் காரணம் என்ன என்பது குறித்த ஆய்வும் இன்றைய சூழலில் அவசியமானதாகும்.



# எங்கையப்பா போறம்?

கதிரேசன் காத்தவராயன்

நேற்றைக்கதிலை முருகேசர் வீட்டடிக்குப்போவமெண்டு நினைச்சுக் கொண்டு போனன். ஆனால் முருகேசர் வழியிலையே எதிர்ப்பட்டார். கூடவே தம்பரும் வந்தார். அதிலையே நல்ல நிழலாயிருந்ததாலை றோட்டுக்கரையிலையே நிண்டிட்டம். முருகேசரைத் தம்பர் 'அதுசரி அப்ப உதுகளுக்கு முடிவுதான் என்ன?" எண்டு கேட்டார்.

எனக்கு ஒண்டும் விளங்காமல் ரண்டு பேரையும் மாறிமாறிப் பாத்தன். 'அது கதிரேசண்ணை! உந்தச் சாமான் சக்கட்டு விலையளைப் பற்றிக் கதைச்சுக்கொண்டல்லே வந்தனாங்கள்... அதைத்தான் தம்பர் கேட்டுது' எண்டு முருகேசர் விளங்கப்படுத்தினார். 'ஏறின விலையள் எப்பவெண்டாலும் இறங்கினதாய் வரலாற்றிலை நடந்திருக்கோ?... அப்பிடி எப்பவாவது நடந்திருந்தாலும் அது நிண்ட இடத்துக்கே வாறேல்லை... கூடித்தான் இருக்கும்" எண்டன் நான்.

'கொண்டாட்டக் காலங்களிலை பட்டியல் வைக்கிறமாதிரி எண்டுறியள்...! கூடப்போட்டு வெட்டிக் குறைச்சு விக்கிறதல்லே வழமை..?" எண்டார் தம்பர். 'தம்பு பிடிச்சிட்டாய் பாத்தியோ, உதுதான் நடக்குது"...' எண்டார் உற்சாகமாய் முருகேசர். "அதேதான்ரா தம்பு" எண்டு நானும் சொல்ல தம்பர் ஒரு சிரிப்புச் சரிச்சார்.

"அது சரிதான் விலையைக் குறைக்கிறமெண்டு அறிவிக்கிறது நடந்தாலும் அப்பவெல்லாம் பழைய ஸ்ரொக் சாமானுகள்தான் கடையளிலை விக்கிறாங்கள்... பழைய விலைதான்"... எண்டு முருகேசர் சொல்லிக்கொண்டிருக்க "விலை கூடப்போகுதெண்ட கதை வந்தால் மட்டும் ஸ்ரொக் முடிஞ்சிடும்.... விலைகூடின அறிவித்தல் வந்த உடனையே ஸ்ரோறுக்குள்ளை சாமானுகள் வந்திடுகுதல்லே... அததான் ஆச்சரியம்.. என்ன?" எண்டு கேக்க சிரிச்சினம்.

"உதுகள் வியாபார நுட்பங்கள் கண்டியளோ!" எண்டார் முருகேசர். "அது சரி! கறன்றும் நிக்கப்போகுதாம்,... அப்ப என்னதான் செய்யிறது?"

களப்பணியாற்றும் காவல் துறையினரிடம் குவிந்துள்ள அதிகாரம் முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்த உயரதிகாரிகளின் கண்காணிப்பும், வழிகாட்டுதலும் குறைந்து வருகின்ற நிலை நிலவுகிறது. அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துபவர்களைக் கண்டித்து, முறைப்படுத்துவதற்கு மாறாக, அவர்கள் செய்யும் முறைகேடுகளைப் புறந்தள்ளிவிடும் மனநிலை உயரதிகாரிகள் சிலரிடம் வெளிப்படுகிறது.

காவல்துறையில் செல்வாக்கு மிகுந்த பணியிடங்களைப் பெறுவதில் காவல் அதிகாரிகளிடையே போட்டி நிலவுவதும், சிரமப்பட்டு வாங்கிய பதவியைத் தக்க வைத்துக்கொள்வதில் கவனம் செலுத்துவதும் காவல்துறையில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கும் பணியின்போது ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு உயரதிகாரிகளின் கவனக்குறைவான திட்டமிடல் காரணமாக இருந்தாலும், களப்பணியாற்றும் காவல்துறையினர் மீது பழி சுமத்துகின்ற நடைமுறை காவல் துறையின் செயல்திறனை இழக்கச் செய்கிறது.

காவல்துறையில் பல நிலைகளில் பணியில் சேர்பவர்களின் பணித்திறனை ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யும் முறை சம்பிரதாயத்திற்காகச் செய்யப்படுவதால், தங்களின் பணித்திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு காவல்துறையினருக்கு ஏற்படுவதில்லை.

உயரதிகாரிகளுக்குத் தெரியாமல் கையூட்டு பெற்றுவந்த நிலை மாறி, வெளிப்படையாக கையூட்டைக் கேட்டுப் பெறும் நிலையை நோக்கி காவல்துறை நகர்ந்து செல்லும் துர்பாக்கிய நிலையை சீர்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு போன்றன விவாதிக்கப்படும் நிலையில் காவல்துறையின் முழுமையான மறுசீரமைப்புக் குறித்துச் சிந்திப்பதும் இன்றியமையாதது அவசியம்.

எண்டு அங்கலாய்ச்சார் தம்பர். அப்ப தான் அவடத்துக்கு வந்து சைக்கிளாலை குதிச்ச வல்லியம்மானுக்கு தம்பற்றை கேள்வி முழுசாய்க் காதிலை விழுந்திருக்க வேணும் "எடேய் தம்பா! உந்த கறண்டை எப்பவெடா கண்டனி?" எண்டு தம்பரைக் கேட்டார் வல்லியம்மான்.

"அப்ப மண்ணெண்ணை வாங்கலாம்,... இப்ப எங்கை போறது அதுக்கு? இருட்டுக்கை இருக்கேலுமோ?" எண்டார் தம்பர். அதுக்கு வல்லியம்மான் "காட்டுக்குத் தாறமெல்லே விளக்கைக் கொழுத்தன்?" எண்டார். "அம்மான் காட் எண்ணை முடிஞ் சுதாமல்லே! ரண்டு தரம் போய்ப் போய்த் திரும்பினனான்" எண்டு நான் சொல்ல வல்லியம்மான் சிரிச்சார்.

"இஞ்சார் அதததை அவனவன் செய்ய வேணுங் கண்டியளோ? வாற எண்ணை எங்கையெல்லாம் போகுதெண்டு தெரியாமல் இருக்கிறியள்.... நான் நானூறு ரூவாய்ப்படி ரண்டு லீற்றர் இப்பதான் வாங்கி வீட்டிலை வைச்சிட்டு வாறன்.... கதிரேசு உன்ரை எண்ணைதானோ தெரியேல்லை. ஒருக்காப் போய்ப் பாரப்பா" எண்டு சத்தமாச் சரிச்சார். வெளியாலை கூடின விலையிலை மண்ணெண்ணை உலாவுதெண்டது கேள்விப்பட்டதுதானே.

'அது முந்தி, அரசாங்கம் கப்பலிலை அளந்தனுப்பின மண்ணெண்ணையிலை தாங்களும் எடுத்து சனத்துக்கும் எல்லாருக்கும் கிடைக்கிற மாதிரி நிர்வாகம் செய்தவங்களல்லே? அதுகும் பெரும் படிப்புகள் படிக்காத சின்னப்பெடியள்?" எண்டு வல்லியம்மான் சொல்லி எல்லாரையும் ஒரு பார்வை பாத்தார். அதிலை ஒரு விதமான பெருமையும் இருக்கிற மாதிரி இருந்துது.

"எடேயப்பா இப்ப கொம்பியூட்டரிலை செய்யேலா வேலையளையெல்லாம் அந்த நேரம் எவ்வளவு சிறப்பாச் செய்தவங்கள் சொல்லுங்கோ பாப்பம்?" எண்டு கேட்டு நிப்பாட்டினார் வல்லியம்மான். "உங்கடை நடுவிலனும் உந்த வேலைதானே செய்தவனெண்டு சொல்லுறனியள்?" எண்டு தம்பர் கேக்க "பின்னையென்னடா..." எண்டு கண்ணைத் துடைச்சுப்போட்டு அண்டைக்குப் போய் விளக்கு ஏத்தேக்கையும் அதுகளைத்தான் நினைச்சனான் எண்டார் வல்லியம்மான்.

"அதுகளை நினைக்கேக்கை பெருமையும்தான் கவலையளுந்தான்"... எண்டு முருகேசர் முடிக்கயில்லை "அப்படியொரு காலம் வந்து... அது எப்ப வாறது?" எண்டு தம்பர் முடிச்சார். "உதுதானப்பா எங்கடை பிரச்சனையே! அடுத்து என்ன நடக்கப் போகுதெண்டு பாக்கிறேல்லை"... எண்டு வல்லியர் புறுபுறுக்க "நாங்கள் நவீன உலகத்திலையல்லே இருக்கிறம்...! பொற போக்கிலை போறதுதான் பழகினது" ... போவம்" எண்டுகொண்டு வீட்டுக்குத் திரும்பினன்.

89

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

நாமே நமக்காக ஒரு வெளியை வகுத்துக்கொண்டு அதை அடைதல், தக்கவைத்தல் எனப் பிரயத்தனமெடுக்கிறோம். அவ்வேளையில்தான் சட்டகம் அல்லது அளவுகோலானது தனது நிலையைத் தெரிவுசெய்கின்றது. இங்கேதான் மனதினது பன்முகப்பட்ட நிலைப்பாடானது கவனிப்புக்குரியதாகிறது. அதுவாகவே அறிந்து அதுவாகவே தேர்ந்து அதுவாகவே கருத்தைக் கட்டமைத்து அதுவாகவே ஒப்பீடுசெய்து என்கிற விதமாக இறுதியில் தான் யார் என்பதையும் தனக்கென்ன தேவையென்பதையும் தான் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் மறந்துபோகிறது.



எல்லாவற்றையும் உருவாக்கிக்கொள்கிற அது தன்னைத் தகவமைப்பதிலிருந்து விலகிவிடுகிறது. உருவாக்கிய என்பதைவிட உருவகித்துக்கொண்டு என்பது அதிகம் பொருத்தமானது. அது உருவாக்கிய வெளியும் அது கொண்டிருக்கக்கூடிய விடயங்களும் வெறும் கற்பிதங்களாலானவை என்பதை மறந்துபோய் விடுகிற மனது அது அல்லது அவை அடையப்படவோ தொட்டுணரப்படவோ முடியாதவை என்கிறபோது தனது இயலுமை தொடர்பில் அதீத தாழ்வு நிலையை அடைந்துவிடுகிறது.

இயலுமை என்பது முன்பே பேசியதுபோல சுயமான உள் மதிப்பிடலினது தன்பெறுமதிதான். தாழ்வு நிலையில் தன்னால் அடைய அல்லது செய்ய இயலாது என்பதை தனக்கு வெளியேயான இன்னொரு கருத்தாக்கத் தளத்துக்குள் சென்று ஆரா

**இராதாகிருஷ்ணன்**

# மொழி வளர....



ஒரு மொழியின் தூய்மையும், பண்பாடும், வளர்ச்சியும் அந்த மொழி சார்ந்த நிலத்தையும், அம்மொழி பேசும் மக்களையும் பொறுத்தே அமையும். அதாவது, மொழியின் நிலைத்த வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் மக்கள் வழக்குப் பேச்சு இன்றியமையாதது.

காலத்திற்கு ஒவ்வாத சில வரையறைகளைக் காலச்சூழலுக்கேற்ப மாற்றி, சீர்திருத்திக்கொள்ளவேண்டியது மொழியின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. படிப்பறிவும், பட்டறிவும் கலந்து, அறிஞர் உலகமும், பொதுமக்கள் உலகமும் ஒன்றுக்கொன்று முரண்பாடின்றி பேசக்கூடிய நிலை உருவாகும்போதுதான் மொழியில் முன்னேற்றம் ஏற்பட முடியும்.

அந்த வகையில், ஆக்ஸ்ஃபோர்டு அகராதி அமைப்பு ஆண்டுதோறும், அந்த வருடத்தில் மக்களால் அதிகமாக பயன்படுத்தப்பட்ட, அதிக முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைக்கு "இந்த ஆண்டிற்கான வார்த்தை' என்ற அங்கீகாரத்தை வழங்கி கௌரவித்து வருகிறது. ஆக்ஸ்ஃபோர்டு அகராதி நிறுவனம், ஒவ்வோர் ஆண்டும் சிறந்த வார்த்தையைத் தேர்ந்தெடுப்பதற்காக இணையதள வாக்கெடுப்பு நடத்தி வருகிறது.

ஒரு ஆண்டிற்கான சிறந்த சொல்லை, முந்தைய 12 மாதங்களில் மக்களின் சமுதாயப் பண்பின் அடிப்படைக் கூறுகளையும், குறிப்பிட்ட சமயத்தில் ஒருவரிடம் காணப்படும் மனநிலையையும், எண்ணங்களையும் பிரதிபலிக்கும் நோக்கத்தை மையமாக வைத்துத் தேர்ந்தெடுத்து மக்களின் வழக்குச் சொல்லாக ஆக்ஸ்ஃபோர்டு அகராதி அறிவித்து வருகிறது. 2013-இல் 'செல்ஃபி', 2017-இல் 'யூத்குவாக்', 2018-இல் 'டாக்சிக்', 2019-இல் 'க்ளைமேட் சேஞ்ச்', 2021-இல் 'வாக்ஸ்' ஆகிய வார்த்தைகளை மக்களின் வழக்குச் சொல்லாக அறிவித்தது. 2020-இல் எந்த வார்த்தையையும் அறிவிக்கவில்லை.

இந்த ஆண்டு 'மெட்டாவெர்ஸ்', 'ஐ ஸ்டாண்ட் வித்', 'கோப்லின் மோட்' ஆகிய மூன்று வார்த்தைகள் மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. கடந்த கார்த்திகை, 21-ஆம் நாள் முதல் மார்கழி 2-ஆம் நாள் வரை இணையதளம் வழி வாக்கெடுப்பு நடந்தது.

இந்த ஆண்டின் சிறந்த வார்த்தையாக 'கோப்லின் மோட்' என்ற வார்த்தையை ஆக்ஸ்ஃபோர்டு அகராதி அமைப்பு தேர்ந்தெடுத்துயவும் தீர்ப்பிடவும் முயல்கிறது. முன்பே அதிகம் பேசியதுபோல சுயமதிப்பிடலானதுகூட ஒப்பீடுகளிற்கூடாகவே ஆற்றப்பட்டிருக்கிறது என்பதை மறந்து போகிறது மனது.

மறந்துபோதல் என்பதில்கூட பாரபட்சமற்று இயங்குவதிலிருந்து மனம் தவறிவிடுகிறது. தனக்குப் பிடித்தமானதை அடைந்திருக்கிறேனே என்று கொண்டாடியதை மறந்துவிட்டு வேண்டாதது கிடைத்துவிட்டதே என்பதை நினைவில் வைத்துப் புலம்புகிறது. நினைவில் வைத்திருத்தல் எதிர் மறத்தல் என்கிற விடயம் முக்கியமானது. ஆனால் இவ்விடயத்தை நாம் கவனத்திலெடுக்கவோ முக்கியத்துவம் கொடுத்து ஆராயவோ தவறிவிடுகிறோம்.

இந்தவிடத்தில் நாம் எவற்றை நினைவில் காவித் திரிகிறோம் என்பது முக்கியமானது. அனேகமாக நாம் கற்பிதங்கள்வழி உருவாகிய விடயங்களையே வைத்திருக்கிறோம். பட்டறிவின்வழி பெற்றுக்கொண்டவற்றில் எதிர்மறை விளைவுகளைச் சந்தித்த விடயங்களையும் அனேகமாகக் கைவசமாகக் கொண்டுதான் திரிகிறோம் என்பதும் கசப்பான உண்மையே.

நல்ல நினைவுகள் எதிர் கெட்ட நினைவுகள் எனும் விதமானதொரு வகைப்படுத்துதலையும் நாம் செய்து வைத்திருக்கிறோம். இதுவும் அளவுகோலினது அசைவிற்கேற்பவும் எம்மிடமிருக்கிற கற்பிதங்கள் வழியேயுமே வேறுபிரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. நல்லவை கெட்டவை என்பவைகூட கற்பனைப் பிரிகோட்டினால் வேறாக்கப்பட்ட கற்பிதங்கள்தான். அதேவேளை ஒப்பீடுகளும்தான். ஒன்றோடொன்று ஒப்பிட்டுக்கொண்டதன் பெறுதிதான் நல்லது அல்லது கெட்டது.

இங்கு குறிப்பிடவேண்டியதொரு விடயம் கெட்டதென்னும் ஒரு விடயத்தை நல்லதென ஒன்றை தொட்டுணர்வதன்மூலமே அடைந்து கொள்கிறோம். நிழல் நல்லது. வெயில் கெட்டது. வெயிலை அனுபவித்ததன் பின்னரான பெறுதிதான் நிழலைக் கொண்டாடத் தூண்டுகிறது. அதேவேளை வெயில் என்கிற ஒன்று இல்லையெனில் நிழலை உணர்ந்துகொள்ள முடியுமா? இருட்டு இல்லையெனில் ஒளிக்கு எந்தவிதமான பெறுமதியும் இல்லை.

இதுதான் யதார்த்தமாக இருக்கும்போது வேண்டியது வேண்டாதது எனவும் நல்லது கெட்டது எனவும் பிரித்துப் பார்ப்பது மனம் கொண்டியங்கும் முன் இருப்பு நினைவுகளாலான கற்பிதங்களேதான். இப்படியான நிலையில் மறத்தல் என்பது நல்லதாகவே தோன்றும். மறுதலையாக மறத்தலென்பது சாத்தியப்படும்போது ஒவ்வொன்றும் புதிதாகத் தோன்றும். பட்டறிவென்கிற ஒரு யதார்த்தமான வழித்துணை அற்றுப்போகும்.

தேவையற்றதை மறக்கவேண்டும் என்கிற உபதேசம் அடிக்கடி கேட்டுச் சலித்துப்போன ஒன்று. அப்படியில்லையா? அப்படியாயின் தேவையானதெது? தேவையில்லாததெது? சிந்திப்போம்.

அறிவித்துள்ளது. இந்த 'கோப்லின் மோட்' என்ற வார்த்தை சுமார் **3,18,956** லட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற வார்த்தையாக ஆக்ஸ்ஃபோர்டு அகராதி அமைப்பு அறிவித்துள்ளது. **93** சதவீதம் பேர் இதனைத் தேர்ந்தெடுத் துள்ளனர். அதே சமயத்தில் 'மெட்டாவெர்ஸ்' **4,484** வாக்குகளும், 'ஐ ஸ்டாண்ட் வித்' என்ற வார்த்தை **8,638** வாக்குகளும் பெற்று முறையே இரண்டாமிடத்தையும், மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

'கோப்லின் மோட்' என்றால் பொதுவாக உள்ள சமூகத்திற்கென இருக்கும் விதிகள், கட்டுப்பாடுகள், எதிர்பார்புகள் ஆகியவற்றையெல்லாம் நிராகரித்து, பொருட்படுத்தாமல் தனிநபர் அவரவருக்கு எது எது விருப்பமானதோ அதையெல்லாம் செய்தல், சுய விருப்பத்துடன் தன் நலன் சார்ந்தே சிந்தித்தல், குற்றவுணர்வு ஏதுமில்லாமல் சோம்பேறிதனமாக, பேராசையுடன் வெட்கமின்றி நடந்து கொள்ளுதல் இவை அனைத்தும் இந்த வார்த்தையில் அடங்கியுள்ளன. அதாவது, இந்த வார்த்தை குறிப்பாக வீட்டை சுத்தப்படுத்தாமல் அலங்கோலமாக்கி, சோம்பேறித்தமான கற்பனை உலகில் இருப்பவர்களின் மனநிலையை எடுத்துக் காட்டுகிறது.

'மெட்டாவெர்ஸ்' என்பது ஒரு விரிந்த பொருள்தரும் சொல். இதைப் பற்றி ஒரே வார்த்தையில் விளக்கிட முடியாது. உண்மை உலகத்திற்கு அப்பால் இருக்கும் ஒரு எண்ம உலகம் (டிஜிட்டல் வேர்ல்டு) இது. அதாவது, மெய்ந்நிகர் வடிவங்களுக்கான தளத்தை முகநூல் (மெட்டா) போன்ற நிறுவனங்கள் வழங்கினால், அதுதான் மெட்டாவெர்ஸ். மெட்டாவெர்ஸ் என்ற வார்த்தை ஆக்ஸ்ஃபோர்டு அகராதியில் **1992**ஆம் ஆண்டு இடம் பெற்றுள்ளது. மேலும், இவ்வார்த்தை நீல் ஸ்டீஃபன்சன் எழுதிய "ஸ்னோ கிராஷ்' எனும் நாவலிலும் இடம் பெற்றுள்ளது.

'ஐ ஸ்டாண்ட் வித்' எனும் வார்த்தை **14**-ஆம் நூற்றாண்டிலிருந்தே அறியப்பட்டாலும், **2009**-ஆம் ஆண்டில்தான் பிரபலமானது. ஆனாலும், **21**ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் சமூக வலைத்தளங்களில் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக, தனி நபரோ, குழுவோ ஒருவருக்குத் துணையாக நின்று அவரை ஆதரிப்பது "ஹேஷ்டேக்' ஆனது. உக்ரைன் மீதான ரஷ்ய நாட்டின் படையெடுப்பைத் தொடர்ந்து மார்ச் **2022**-இல் இவ்வார்த்தை மிகவும் பிரபலமானது.

தொற்று நோய் வேகமாகப் பரவும் காலத்திலும், உலக நாடுகளிடையே போர் நடைபெறும் காலத்திலும் மக்கள் அச்சம் காரணமாக தங்கள் வீடுகளிலேயே முடங்கி இருப்பார்கள். உதாரணமாக, கொரோனா தீநுண்மி பரவிய காலத்தில் அனேகமாக அனைவருமே தங்கள் வீடுகளிலேயே முடங்கி இருந்தார்கள். அவ்வாறு, மக்கள் அனைவரும் மனதளவில் சோம்பேறியாகி 'கோப்லின் மோடில்' இருந்ததால், 'கோப்லின் மோட்' என்ற வார்த்தை மீண்டும் இந்த ஆண்டு டிவிட்டரில் பிரபலமான வார்த்தையாகி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்ஸ்ஃபோர்டு நிறுவனத்தின் மொழிகள் பிரிவின் தலைவர் காஸ்பர் கிராத்வோல் இது குறித்துக் கூறுகையில், "தங்களுடைய அனுபவத்தில் கிடைத்த வார்த்தையானதால் 'கோப்லின் மோட்' என்பதை இந்த ஆண்டின் சிறந்த வார்த்தையாக மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்" என்று கூறினார்.

எனவே, காலங்காலமாக குறையாத பயிற்சியும், நிறைவான வழக்கும் பெற்றே மொழி பண்படுகிறது. நாட்டில் இயற்கையால் ஏற்படும் பருவநிலை மாற்றங்கள், அதனால் ஏற்படும் சூழ்நிலைகள், தொழில்நுட்ப மேம்பாடு, மக்களின் பண்பாட்டு வளர்ச்சி ஆகியவைகூட மொழியின் ஆற்றலுக்கும், சொல் வளத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. இதைத்தான் ஆக்ஸ்ஃபோர்டு அகராதி அமைப்பின் மொழியியல் ஆய்வு சொல்கிறது.

# லத்தி

CHARGE

## தர்க்கப் பிழைகளின் கூடாரம்

குற்றவாளியை தண்டிப்பதற்காக காவலர் ஒருவர் கையிலெடுக்கும் **'லத்தி'** என்னவெல்லாம் செய்கிறது என்பதுதான் படத்தின் கதை.

கட்டிமுடிக்கப்படாத அந்தக் கட்டடத்தில் அங்கும் இங்கும் ஒரே பரபரப்பாக ரவுடிகள் ஓடிக் கொண்டு யாரோ ஒருவரை தேடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே கட் செய்தால் வீட்டில் மனைவி, குழந்தையுடன் காவலர் முருகானந்தம் (விஷால்). பணியிடை நீக்கத்தால் **6** மாதமாக வீட்டிலிருக்கும் முருகானந்தம் மீண்டும் பணியில் சேர அதிகாரிகளை நாடுகிறார். அப்படி ஒரு மேலதிகாரியின் பரிந்துரைக்ளிக் ஆக, ஹேங்கரிலிருக்கும் தூசிபடிந்த காக்கிச் சட்டையை மீண்டும் அணிந்து பணிக்கு செல்லும் அவரிடம் உயரதிகாரி ஓர் உதவியை நாட, அது முருகானந்தத்தை பாதிக்கிறது. அது என்ன உதவி? முருகானந்தம் ஏன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்? அவருக்கும் வில்லனுக்கும் என்னதான் பிரச்சினை? - இவற்றை ஆக்‌ஷன் சண்டைக்காட்சிகளை மட்டுமே வைத்து சொல்லியிருக்கும் படம் **'லத்தி'**.


ஒரு பெரிய கும்பலை ஒரே ஆளாக சிங்கிள் லத்தியுடன் விஷால் அடக்கும் காட்சியிலேயே படம் அதிரடிக்கு மட்டுமே என்று பறை சாற்றி விடுகின்றது. அதற்குப்



பார்வையாளர்களை தயாராகிக்கொண்டிருக்கும்போது, 'நம்ம ஹெல்ப்லஸ் தான் ஹோப்லஸ் இல்ல', 'பயப்பட்ற விஷயத்துக்கு எதிராக சண்டை போடணும், இல்லன்னா நகர்ந்திடணும் (fight or fly), 'Thinking will not over come fear. But action will' போன்ற வசனங்கள் படத்தின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

நடுத்தர குடும்பத்தைச்சேர்ந்த காவலரைப் பிரதிபலிக்கும் விஷால், நடிப்பில் யதார்த்தத்தைக் காட்ட முயற்சிக்கிறார். உணர்வுகளை வெளிப்படுத்துவதில் நன்றாக இருக்கும் அவரின் நடிப்பு தன் மகனுக்காக கெஞ்சும் இறுதிக்காட்சியில் 'ஓவர் அக்டிங்' ஆகிவிடுகிறது. அதே சமயம் கதாபாத்திரத்திற்கான உழைப்பும், சண்டைக் காட்சிகளில் அவரது மெனக்கெடலும் திரையில் பளிச்சிடுகிறது. சுனைனா, பிரபு, மாஸ்டர் லிரிஷ் ராகவ், தலைவாசல் விஜய், முனிஷ்காந்த், ரமணா, வினோத் சாகர் கதைக்கு தேவையான பங்களிப்பை செலுத்துகின்றனர்.

முதல் பாதியில் நல்ல தொடக்கத்துக்கான அம்சங்களைக் கொடுக்கும் படம், இரண்டாம் பாதியில் அதனை மறக்கடிக்கும் விதமான அளவுக்கதிகமான சண்டைக் காட்சிகளால் சோர்வை ஏற்படுத்திவிடுகிறது. குறிப்பாக, தர்க்க ரீதியான மீறல்களை கண்டு கொள்ளாமல் படம் தேமேவென நகர்வது தான் பெரிய தலைவலி. டிஐஜி தரத்திலிருக்கும் அதிகாரியால் ரவுடி ஒருவரை தண்டிக்க முடியாமல் போவது, காவல்துறை, அரசியல் கட்சியினர் என அனைவரும் பயப்படும் தாதா ஒருவரை விஷால் சிங்கிள் ஆளாக கொல்வது, குறிப்பாக இரண்டாம் பாதியில் நூற்றுக்கணக்கான ரவுடிகளை அடித்து துவம்சம் செய்யும் அவர், இரும்புக் கம்பியை லத்தியைக் கொண்டு எதிர்ப்பது... இதையெல்லாம் கடந்து, கத்தி குத்து, முதுகில் அரிவாள் வெட்டு, காலில் ஆணிக் குத்து, குருதி வழியும் முகத்துடன் ஃபுல் எனர்ஜியுடன் இருக்கும் நாயகனை இன்னும் தமிழ் சினிமா மறக்கவில்லை.



தவிர, சக காவலர் ஒருவர் ஆபத்தில் இருப்பதை அறிந்தும் சைலன்டாக இருக்கும் காவலர்கள், மண்ணில் புதைந்தும் மீண்டும் எழுந்து வரும் விஷாலின் மகன், வில்லன் ராணா பொலித்தீன் கவரை மாஸ்க்காக்கி அதற்குச் சொல்லும் காரணங்கள் என்பனவெல்லாம் பெரும் அயற்சி. ஒரு சண்டைக்காட்சியை இரண்டாம் பாதி முழுக்க வைத்து இழுத்திருப்பது சோர்வு. இதனிடையே கதையில் வரும் சின்ன திருப்பம் படு செயற்கைத்தனம்.

'கண்டிக்க அடிக்கலாம்', 'உங்கள மாதிரி ரவுடிகள அடிக்கிறது உயர் அதிகாரிகள் எங்களுக்கு தர ஆஃபர்' என்பது பொதுமக்கள் மீதான காவல் துறையினரின் அத்துமீறல்களையும், அடிப்பதுதான் தீர்வு என்பதை தொடர்ந்து நிறுவுவதன் மூலம் சட்டத்தை மீறுவதும் நெருடல். காவல் துறையினரின் 'லத்தி' அடியை நியாயப்படுத்தச் செய்யும் இப்படத்தில் யுவன் சங்கர் ராஜாவின் பின்னணி இசை பெரும் பலம். 'சண்டைக் கோழி' படத்தின் உச்சக்காட்சிப் பின்னணி இசையை மறுஆக்கம் செய்திருக்கும் உணர்வைக் கொடுத்தாலும் ரசிக்கும் படியாகவே இருக்கிறது. பாலசுப்ரமணியம், பாலகிருஷ்ணா ஒளிப்பதிவும், பீட்டர் ஹெயினின் ஸ்டன்ட்டும் கவனிக்கவைக்கிறது.

மொத்தத்தில் அதிரடிப் படமாக உருவாகியிருக்கும் 'லத்தி' தர்க்கப் பிழைகளின் கூடாரமாக இருப்பது பெரும் சோர்வு.





# அவதார் 2

## மீண்டும் ஓர் காட்சி அனுபவம்

ஜேம்ஸ் கெமரூனின் பன்டோரா எனும் புதிய உலகின் இரண்டாவது பாகம் வெளியாகி உலகம் முழுவதும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. மனிதர்களைப் போலவே சிந்திக்கும் ஆனால் இயற்கையுடன் இணைந்து வாழும் வித்தியாசமான விலங்குத் தோற்றத்தையுடைய மனிதர்களான நாபிகளின் உலகத்தைக் கண்முன் விரிக்கும் 'அவதார்' படங்களின் வரிசையில் இது இரண்டாவது படம். முதல் படம் பன்டோரா நிலத்தின் அனுபவம் என்றால் இந்தப் படம் முற்றிலும் நீர் மற்றும் நீர் சார்ந்த பகுதிகளின் காட்சி அனுபவம்.

'அவதார்' முதல் பாகத்தில் 'ஸ்கை பீப்பிள்' எனப்படும் வான் மனிதர்களின் வருகையும் அதனால் நாவிகளுடன் ஏற்படும் மோதலும் காட்டப்பட்டிருக்கும். இந்த மோதலின் முடிவில் நாவிக்கள் வென்று வான் மனிதர்களைத் திருப்பியனுப்பி இருப்பார்கள். அதன் பின்னர் மீண்டும் வழமைக்குத் திரும்பிய பன்டோராவின் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பதை முன் கதைச் சுருக்கம்போலச் சொல்லியபடி விரிகின்றது இந்த இரண்டாவது பாகமான 'அவதார் தி வே ஆஃப் வோட்டர்'.

படத்தின் முதல் பாகத்தில் பன்டோராவுக்கு அனுப்பப்பட்ட வான் மனிதர்களின் படையைச் சேர்ந்த சிலர் நாபிகளுடன் இணைந்து அவர்களுக்கு உதவி செய்ததன் மூலமே நாபிகளால் வெற்றியை ஈட்ட முடிந்தது. அப்படிப் நாபியாக மாறிய வான் மனிதனான ஜேக் சல்லியே (சாம் வொர்திங்டன்) இப்போது நாபிகளின் தலைவன். தனது மனைவி நெய்த்ரி (ஜோய் சால்டனா) மற்றும் தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

அந்த வாழ்க்கை இயல்பாகக் கடந்து வரும் காலத்தில் திடீரென ஒருநாள் வான் மனிதர்கள் மீண்டும் வருகிறார்கள். இந்தத் தடவை முதல் தடவையைவிட இன்னும் பலத்தோடும் மேம்பட்ட தொழில்நுட்பத்தோடும் வருகிறார்கள். அவர்களால் நாபிக்களை வென்று பன்டோராவைக் கைப்பற்ற முடிந்ததா என்கிற நீண்ட கேள்விக்கு பதில் சொல்ல முயன்றிருக்கிறது படம்.

'அவதார்' எனும் மாய கனவுலகில் மிதக்கச் செய்து பிரமிப்பூட்டிய ஜேம்ஸ் கேமரூன், 13 வருடங்களுக்குப் பிறகு இரண்டாம் பாகம் வெளியாகியிருக்கிறது. வெண் திரை வழியே நீலவண்ணம் செறிந்த அந்த மாய உலகிற்குள் இம்முறை வனத்தைக் கடந்து கடல் வழிப் பயணத்தில் நம்மை அழைத்துச் செல்கிறார் இயக்குநர். நாவி இன மக்களின் நிறமும், கடலின் நீரின் நீல வண்ணமும் சங்கமிக்கும் இடத்தில் ஊடாக செல்லும் கடல் வாழ் உயிரினங்கள், வண்ணத்துப்பூச்சியின் அழகை விஞ்சும் மிதக்கும் பஞ்சு பூச்சிகள், கடல்நீருக்குள்ளியிருந்து ஒளி உமிழும் சின்ன சின்ன அழகிய உயிரினங்கள், விரிந்து குலுங்கும் பூக்கள், ஆச்சரியமூட்டும்

டிராகன்கள், கருணையுள்ளம்கொண்ட ராட்சத மிருகம் என அட்டகாசமான காட்சி அனுபவத்தை கிராஃபிக்ஸின் வழியே கூட்டி தான் முன்பு படைத்த உலகை இன்னும் மெருகேற்றி அழகூட்டியிருக்கிறார் ஜேம்ஸ் கேமரூன்.

மிருகங்களோடும், மரம் செடி கொடிகளோடும் தங்கள் கூந்தலை ஒட்டவைத்து, அவற்றோடு உறவாடும் நாவிகளின் காட்சிகள், ராட்சத மிருகத்துடனான சிறுவனின் பாசம், கோபம் கொள்ளும்போது நாவி மக்கள் வெளிப்படுத்தும் அந்த முகபாவனைகள் என ரசித்துப் பார்க்க திரை முழுக்க நீலத்துடன் கலந்திருக்கிறது. ஆனால் அவை கடந்த பாகத்திலேயே திகட்டத் திகட்ட அனுபவித்துவிட்டவைதான் என்றாலும் மீண்டும் ரசிக்க முடிகின்றது.

அந்த ஒட்டுமொத்த மாய உலகமுமே 3டி கண்ணாடியின் வழியே நம் கண்முன் விரிந்து, அந்த உலகில் நாமே சஞ்சரிப்பது போன்ற உணர்வை கொடுப்பதுதான் இந்தப் பாகத்தில் புதுமை. மொத்தப் படத்தின் க்ராஃபிக்ஸுக்கான வெற்றியும் அதுதான். குறிப்பாக, எதிரிகளுடன் நாவி இன மக்கள் நடத்தும் இறுதிப் போர்க் காட்சிகள் அட்டகாசம்!

ஒளி - ஒலிக் கலவை, தொழில்நுட்பம், ஒளிப்பதிவு, பின்னணி இசை என நல்ல திரையரங்குகளில் காணும் பார்வையாளர்களுக்கு சிறந்த காட்சி அனுபவம் உறுதி. சாம் வொர்திங்டன், ஜோய் சால்டனா, ஸ்டீபன் லேங், கேட் வின்ஸ்லெட் ஆகியோர் நேர்த்தியான நடிப்பின் வழி யதார்த்தமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நம்முடன் உரையாடுவதன் உணர்வால் படம் உயிர்கொள்கிறது.

'அவதார்' படத்தின் முதல் பாகம் ஒரு புதிய உலகை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி விறுவிறுப்பையும், சுவாரஸ்யத்தையும் கூட்டியிருந்தது. அதன் நீட்சியாக நீளும் இந்த இரண்டாம் பாகத்தில் திரைக் கதையில் எந்தவித புதுமையையும் நுழைக்கப்படாதது கவலை. திரைக்கதையில் ஆங்காங்கே கற்பனை வறட்சி மேலிடுகிறது. காட்சிகளாக பிரமாண்டமாக விரியும் இப்படத்தில் கதைக்குள்ளியிருந்து வெளிப்படும் சுவாரஸ்யம் சொற்பமே.

இயற்கையோடு வாழும் மனிதர்களுக்கும் இயற்கையை அழிக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோலாக முதல் பாகத்தில் காட்டப்பட்ட படம் இரண்டாம் பாகத்தில் பழி வாங்கும் திரைக்கதைக்குள் நுழைந்தது பலவீனம். கனிம சுரண்டலுக்கு எதிராக நிற்கும் வேற்று கிரகவாசிகளின் போராட்டம், உறுதி என முதல் பாகத்திலிருந்த கதையின் அடர்த்தி, இரண்டாம் பாகத்தில் வெறும் குடும்பக் கதையாக சுருண்டு வறண்டிருப்பது ஏமாற்றம். வெறுமனே நாயகன் ஜேக் சல்லி தனது குடும்பத்தை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற போராடிக் கொண்டும், குடும்பத்தையும் உறவுகளின் நெருக்கத்தையும் காட்சிகள் வழியே உரையாடிக் கொண்டுமிருப்பது சோர்வு. இது மேற்குலக ரசிகர்களுக்கு ஒருவேளை கவர்ச்சிக்குரியதாக இருக்கக்கூடும். குடும்பங்களின் முக்கியத்துவம் குறையாத ஆசிய நாட்டவர்களுக்குச் சலிப்பூட்டுகின்றது.

இருந்தாலும் மொத்தத்தில் 'அவதார்: தி வே ஆஃப் வாட்டர்' அட்டகாசமான காட்சி அனுபவத்தை வழங்குகிறது. அதற்காகவே திரைப் பட ரசிகர்கள் அதனைக் கொண்டாடித் தீர்க்கலாம்.










இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781